



PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்
# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY






சென்னை மலர்: 01 இதழ்: 227 30.03.2026 திங்கட்கிழமை

Chennai Volume: 01 Issue: 227 Monday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY



## இன்றைய நாள்

திங்கள்கிழமை
(30-03-2026)
விசுவாவசு ஆண்டு, பங்குனி-16
பிறை: வளர்பிறை
திதி
துவாதசி காலை 8.26 வரை
பிறகு திரயோதசி.
நட்சத்திரம்:
மகம் பிற்பகல் 3.47 வரை
பிறகு பூரம்
யோகம்
மரண/சித்தயோகம்
ராகுகாலம்
காலை 7.30-9.00 மணி
எமகண்டம்
காலை 10.30 – 12.00 மணி.
சூலம் – கிழக்கு.
நல்ல நேரம் :
காலை 6-7 மணி.
மாலை 3-4 மணி.

மேஷம் ...................... வரவு
ரிஷபம் ...................... சிறப்பு
மிதுனம் ...................... வாழ்வு
கடகம் ...................... ஆதரவு
சிம்மம் ...................... கவனம்
கன்னி ...................... வெற்றி
துலாம் ...................... பணிவு
விருச்சிகம் ........... அமைதி
தனுசு ...................... தாமதம்
மகரம் ...................... நற்செயல்
கும்பம் ...................... மேன்மை
மீனம் ...................... பாராட்டு

# சவாலான தருணங்களை எதிர்கொண்டு வருகிறது இந்தியா

## பிரதமர் மோடி பேச்சு



**சர்வதேச உறவுகள், வெவ்வேறு நாடுகளிடம் இருந்து கிடைக்கும் உதவி, கடந்த தசாப்தத்தில் நாடு கட்டமைத்த திறமை ஆகியவற்றால், இந்த சவால்களை இந்தியா உறுதியுடன் எதிர்கொண்டு வருகிறது.**

**புதுடெல்லி, மார்ச் 30:**

பிரதமர் மோடி வானொலி வழியே நாட்டு மக்களுடன் உரையாடும் மன் கி பாத் நிகழ்ச்சி இன்று காலை 11 மணியளவில் தொடங்கியது. இதன்படி, 132-வது மன் கி பாத் நிகழ்ச்சி இன்று நடந்தது. இதில் பங்கேற்று பேசிய பிரதமர் மோடி, மேற்காசிய போரை நேரிடையாக அல்லாமல் மறைமுகமாக சுட்டி காட்டி பேசினார். அவர் ஆற்றிய உரையின்போது, உலக அளவில் இந்த மார்ச் மாதம் பல நிகழ்வுகளை பார்த்துள்ளது. கடந்த காலத்தில் கொரோனா பெருந்தொற்றால் ஒட்டுமொத்த உலகமும் நீண்ட காலத்திற்கு எண்ணற்ற சிக்கல்களை எதிர்கொண்டது என்பது நம் அனைவரின் நினைவிலும் இருக்கும்.

கொரோனா பெருந்தொற்றுக்கு பின்னர் புதிய தொடக்கத்துடன் உலகம் முன்னேற்ற பாதையை நோக்கி பயணிக்கும் என நாம் எதிர்பார்த்தோம்.

ஆனால், உலகின் வெவ்வேறு பகுதிகளில் போர் சூழல் மற்றும் மோதல் தொடர்ந்து நிலவி வருகிறது. நம் அண்டை பகுதிகளில் ஒரு மாதத்திற்கும் மேலாக கொடூர போர் ஒன்று நடந்து வருகிறது. இந்த நாடுகளில் நம்முடைய குடும்பங்களின் லட்சக்கணக்கான சொந்தங்கள் வசித்து வருகின்றனர்.

அதிலும் வளைகுடா நாடுகளில் வேலை செய்தும் வருகின்றனர்.

அந்த பகுதிகளில் வசிக்கும் 1 கோடிக்கும் மேற்பட்ட இந்தியர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்ததற்காக வளைகுடா நாடுகளுக்கு நான் நன்றிகடன் பட்டுள்ளேன். போர் நடந்து வரும் அந்த பகுதியே நம்முடைய எரிசக்தி தேவைக்கான முக்கியதொரு மையம் ஆக உள்ளது. இதனால், உலக அளவில் பெட்ரோல், டீசல் நெருக்கடி ஏற்பட்டு உள்ளது என்றார்.

சர்வதேச உறவுகள், வெவ்வேறு நாடுகளிடம் இருந்து கிடைக்கும் உதவி, கடந்த தசாப்தத்தில் நாடு கட்டமைத்த திறமை ஆகியவற்றால், இந்த சவால்களை இந்தியா உறுதியுடன் எதிர்கொண்டு வருகிறது.

சந்தேகமேயின்றி இது ஒரு சவாலான நேரம். நாட்டு மக்கள் ஒன்றுபட்டு இந்த சவாலை எதிர்கொண்டு வெல்வோம் என்று மன் கி பாத் நிகழ்ச்சியின் வழியே, நான் இன்று மீண்டும் வலியுறுத்துகிறேன் என்று அவர் பேசியுள்ளார்.

# கேரள சட்டசபை தேர்தல்; என்.டி.ஏ.வுக்கு ஆதரவான மனநிலை உள்ளது

**புதுடெல்லி, மார்ச் 30:**

140 இடங்களை கொண்ட கேரள சட்டசபைக்கான பதவிக்காலம் மே 23-ந்தேதியுடன் முடிவடைகிறது. இந்த நிலையில், கேரள சட்டசபைக்கான தேர்தல் பற்றி இந்திய தலைமை தேர்தல் ஆணையம் கடந்த 15-ந்தேதி அறிவிப்பு ஒன்றை வெளியிட்டது. இதன்படி, கேரளாவில் ஏப்ரல் 9-ந்தேதி ஒரே கட்டத்தில் தேர்தல் நடத்தி முடிக்கப்படும். இதற்கான வாக்கு எண்ணிக்கை மே 4-ந்தேதி நடைபெறும் என தெரிவிக்கப்பட்டது.

இதனை முன்னிட்டு, கட்சிகள் தொகுதி பங்கீடு, வேட்பாளர் தேர்வு உள்ளிட்ட தீவிர அரசியல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. தேர்தலை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளன. இந்த நிலையில், தேசிய ஜனநாயக கூட்டணிக்கு ஆதரவாக பிரசாரத்தில் ஈடுபடுவதற்காக பிரதமர் மோடி கேரளாவுக்கு இன்று வருகை தருகிறார்.

இதனை முன்னிட்டு அவர் வெளியிட்டு உள்ள எக்ஸ் வலைதள பதிவில், கேரள மக்களில் ஒருவராக, அவர்களிடையே இன்று இருப்பதற்காக ஆவலாக எதிர்பார்த்து இருக்கிறேன். பாலக்காட்டில் இன்று நடைபெறும் அரசியல் பொதுக்கூட்டத்தில் உரையாற்ற உள்ளேன். திருச்சூரில் நடைபெற உள்ள சாலை வாகன பேரணியிலும் பங்கேற்க உள்ளேன். கேரளாவில், தேசிய ஜனநாயக கூட்டணிக்கு ஆதரவான மனநிலை உள்ளது. இடது ஜனநாயக முன்னணி மற்றும் ஐக்கிய ஜனநாயக முன்னணியின் திறனற்ற அரசாட்சி போதும் என்ற நிலைக்கு மக்கள் வந்து விட்டனர் என்று அவர் பதிவிட்டு உள்ளார்.

# இன்று தொடங்குகிறது வேட்புமனுதாக்கல்

**சென்னை, மார்ச் 30:**



தமிழக சட்டசபை தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் இன்று (திங்கட்கிழமை) காலை 11 மணிக்கு தொடங்கி வருகிற 6-ந்தேதி (திங்கட்கிழமை) வரை நடக்கிறது. 8 நாட்கள் அறிவிக்கப்பட்டாலும், 4 நாட்கள் மட்டுமே வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய முடியும்.

குறிப்பாக, வருகிற 31-ந்தேதி (செவ்வாய்க்கிழமை) மகாவீர் ஜெயந்தி, ஏப்ரல் 1-ந்தேதி வங்கி முழு வருட கணக்கு முடிவு, 3-ந்தேதி புனித வெள்ளி, 5-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய 4 நாட்கள் விடுமுறை நாட்களாக அமைந்துள்ளது.

எனவே அன்றைய நாட்களில் வேட்பு மனு தாக்கல் செய்ய இயலாது.

நாளை 30-ந்தேதி (திங்கட்கிழமை), 2-ந்தேதி, 4-ந்தேதி மற்றும் 6-ந்தேதி ஆகிய 4 நாட்களில் மட்டுமே குறிப்பிட்ட நேரத்திற்குள் சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலரிடம் மனுக்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

வேட்பாளர்கள் HTTPS://SUVIDHA.CCI.GOV.IN என்ற இணையதளம் மூலமாக வேட்புமனு தாக்கல் செய்ய தேர்தல் ஆணையம் அனுமதி அளித்துள்ளது.

மனு தாக்கலுக்கு கடைசி நாளான 6-ந்தேதி சுபமூகூர்த்த தினம் என்பதால், அன்றைய தினம் அதிக அளவில் வேட்புமனுக்கள் பெற வாய்ப்பு உள்ளது. கால அவகாசம் குறைவாக உள்ளதால், வேட்பாளர்கள் ஆவணங்களை முன்கூட்டியே தயார் செய்து நெரிசலை தவிர்க்க வேண்டும். வேட்பு மனுக்கள் பரிசீலனை வருகிற 7-ந்தேதி நடக்கிறது. வேட்பு மனுக்களைத் திரும்பப் பெற வருகிற 9-ந்தேதி கடைசி நாள் என்று தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

# தவெக வேட்பாளர்கள் பட்டியல் வெளியீடு

**சென்னை, மார்ச் 30:**

தமிழக சட்டமன்ற தேர்தல் ஏப்ரல் 23- ஆம் தேதி நடைபெற உள்ளது. திமுக, அதிமுக, நாம் தமிழர் உள்ளிட்ட கட்சிகள் வேட்பாளர்களை அறிவித்த நிலையில், முதல் முறையாக சட்டமன்ற தேர்தல் களம் காணும் விஜய்யின் தவெக இன்று வேட்பாளர்களை அறிவித்து ள்ளது.

சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள நட்சத்திர விடுதியில் வேட்பாளர்களை விஜய் அறிமுகம் செய்து வைத்தார். விஜய் அறிவித்த வேட்பாளர்கள் பட்டியல் விவரம் வருமாறு:



போட்டியிடும் தொகுதிகள்-வேட்பாளர்கள்;
பெரம்பூர்:விஜய்
திருச்சி கிழக்கு: விஜய்
கோபிசெட்டிபாளையம்:செங்கோட்டையன்,
வில்லிவாக்கம்:ஆதவ் ஆர்ஜுனா
தி.நகர்: ஆதவ் அர்ஜுனா
திருச்செங்கோடு: அருண்ராஜ்
ஆயிரம் விளக்கு: ஜேசிடி பிரபாகர்
கொளத்தூர்: விஎஸ் பாபு
லால்குடி: கு.பகிருஷ்ணன்
பூந்தமல்லி (தனி) : ஆர்.பிரகாசம்
திருப்பூர் வடக்கு: சத்யபாமா
மதுரவாயல்: ரேவந்த் சரண்
அம்பத்தூர்: பாலமுருகன்
மாதவரம்: எம்.எல்.விஜய் பிரபு
வால்பாறை: ஸ்ரீதரன்
மயிலாப்பூர்: வெங்கட்ராமன்,
செய்யூர் (தனி): மோகன் ராஜா
சேப்பாக்கம்: செல்வம்
மதுராந்தகம் (தனி): எழில் கேத்ரின்
ஓமலூர்: அதியமான்
காங்கேயம்; மணி
கோவை வடக்கு: வி சம்பத்குமார்
கோவை தெற்கு: வி செந்தில்குமார்
பர்கூர்; முரளிதரன்
விருதாச்சலம்: எஸ்.விஜய்
பண்ருட்டி: என்.மணிகண்டன்
கடலூர்: வி ராஜ்குமார்
குறிஞ்சிப்பாடி: ராஜ்குமார்
புவனகிரி: மகாலிங்கம்
முதுகுளத்தூர்: மலர்விழி
சிதம்பரம்; என்.பாரி
காட்டு மன்னார் கோவில் ( தனி) : என் சீனிவாசன்
பூம்புகார்: ஜெ.விஜயாலயன்
நாகை: என்.சுகுமார்

# ரூபாய் மதிப்பு வீழ்ச்சிக்கு மத்தியில் ரிசர்வ் வங்கி கட்டுப்பாடு



**புதுடெல்லி, மார்ச் 30:**

வளைகுடா பிராந்திய போரால் இந்திய ரூபாயின் மதிப்பு வீழ்ச்சி அதிகரித்து இருக்கிறது. போர் தொடங்கியது முதல் இதுவரை 4 சதவீதம் அளவுக்கு சரிந்துள்ளது.

இதைத்தொடர்ந்து உள்நாட்டு வினியோக சந்தையில், அங்கீகரிக்கப்பட்ட முகவர்களின் நிகர இந்திய ரூபாய் இருப்பு ஒவ்வொரு வர்த்தக நாளின் முடிவிலும் 100 மில்லியன் டாலர்களுக்குள் இருப்பதை உறுதி செய்யுமாறு ரிசர்வ் வங்கி அறிவுறுத்தி உள்ளது. அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் இந்த உத்தரவுக்கு விரைவில், அதேநேரம் ஏப்ரல் 10-க்குள் இணங்குவதை உறுதி செய்ய வேண்டும்.

உலகளாவிய கச்சா எண்ணெய் விலை உயர்வு, பங்குச்சந்தைகளில் இருந்து வெளிநாட்டு முதலீடுகள் தொடர்ச்சியான வெளியேற்றம் மற்றும் வலுப்பெற்று வரும் டாலர் ஆகியவற்றின் மத்தியில், இந்திய ரூபாய்க்கு எதிரான பெரிய பந்தயங்களைக் குறைப்பதையும், கடுமையான ஏற்ற இறக்கங் களைத் தடுப்பதையும் இந்த நடவடிக்கை நோக்கமாகக் கொண்டிருக்கலாம் என்று சந்தை வல்லுனர்கள் கூறியுள்ளனர்.

# அதிமுக வேட்பாளர்கள் 17 பேர் அறிவிப்பு: 3-ம் கட்ட பட்டியல் வெளியீடு

**சென்னை, மார்ச் 30:**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு மூன்றாவது கட்டமாக 17 தொகுதிகளுக்கான அதிமுக வேட்பாளர் பட்டியல் வெளியாகி உள்ளது. இதில் முதல்வர் ஸ்டாலின் போட்டியிடும் கொளத்தூர் தொகுதியில் அதிமுக வேட்பாளராக பி.சந்தானகிருஷ்ணன் அறிவிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியல் அரசியல் கட்சிகள் அறிவித்து வருகின்றன. அந்த வகையில் அதிமுகவில் ஏற்கெனவே 150 பேர் கொண்ட வேட்பாளர் பட்டியல் இரண்டு கட்டங்களாக வெளியிடப்பட்டது.

கூட்டணி கட்சிகளுக்கு 67 தொகுதிகளை அதிமுக ஒதுக்கியுள்ள நிலையில், 167 தொகுதிகளில் அக்கட்சி போட்டியிடுகிறது.

சென்னை மாவட்டத்தில் உள்ள தொகுதிகள் உள்ளிட்ட 17 தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியல் தற்போது வெளியாகி உள்ளது. அதிமுக 3-ம் கட்ட வேட்பாளர் பட்டியல்:





1. ஆயிரம் விளக்கு - முன்னாள் அமைச்சர் பா.வளர்மதி
2. அண்ணாநகர் - முன்னாள் அமைச்சர் கோகுல இந்திரா
3. சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி - ஆதிராஜாராம்
4. திட்டக்குடி (தனி) - முருகுமாறன்
5. துறைமுகம் - ராயபுரம் ஆர்.மனோ
6. விருகம்பாக்கம் - விருகை வி.என்.ரவி
7. தியாகராய நகர் - சத்தியநாராயணன்
8. வேளச்சேரி - அசோக்
9. சோழிங்கநல்லூர் - கந்தன்
10. டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் - ஆர்.எஸ்.ராஜேஷ்
11. வில்லிவாக்கம் - எஸ்.ஆர்.விஜயகுமார்
12. திருச்சுழி - ராஜவர்மன்
13. ஆலந்தூர் - சரவணன்
14. கொளத்தூர் - சந்தானகிருஷ்ணன்
15. திரு.வி.க நகர் (தனி) - பொற்கொடி ஆம்ஸ்ட்ராங்
16. எழும்பூர் (தனி) - அபிஷேக் ரங்கசாமி
17. ஆலங்குடி - விமல்



மானாமதுரை

# நலம் தரும் சீரடி சாய்பாபா கோவிலில் பூச்சொரிதல் விழா

**சிவகங்கை, மார்ச் 30:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ரயில்வே காலணி ஆதனூர் ரோட்டில் அமைந்துள்ள நலம் தரும் ஸ்ரீசீரடி சாய்பாபா கோவிலில் பகவான் ஸ்ரீசீரடி சாய்பாபா பிறந்தநாள் விழா பூச்சொரிதல் விழா ஆத்ம லிங்க பூஜை முப்பெரும் விழா நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் பூத்தட்டு ஊர்வலம்.. நடத்தி மலர் வழிபாடு செய்தனர் . அதைத் தொடர்ந்து மங்கள ஆரத்தி. மற்றும் நாராயண சேவை அன்ன தானம் நடைபெற்றது.

சிறப்பு பூஜைகளை நாகமணி அய்யர் நடத்தினார். ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்தனர். விழாவில் பக்தர்கள் தனித்தனியாக சாய்பாபாவிற்க்கு மலர் தூவி ஆரத்தி சேவை செய்தனர்.

# ஸ்ரீ விஸ்வரூப சாஸ்தா சித்தர் பீட பீடாதிபதியின் 47 வது ஜெயந்தி விழா!



**வேலூர், மார்ச் 30:** வேலூர் மாவட்டம் ,வேலூர் மாநகரம், பலவன் சாத்துக்குப்பம் மலையடிவாரத்தில் ஸ்ரீ விஸ்வரூப சாஸ்தா சித்தர் பீடம் அமைந்துள்ளது. இந்த விஸ்வரூப சாஸ்தா சித்தர் பீடத்தின் பீடாதிபதியின் 47வது ஜெயந்தி விழா விமரிசையாக நடந்தது.

இந்த விஸ்வரூப சாஸ்தா சித்தர் பீடத்தின் கதவுகள் அதிகாலை 5 மணிக்கு திறக்கப்பட்டு சிறப்பு அபிஷேக, ஆராதனைகள் நடந்தது. இதையடுத்து ஸ்ரீவிஸ்வரூப சாஸ்தா சித்தர் பீடத்தில் அமர்ந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார். அவரது 47 வது ஜெயந்தி விழாவை முன்னிட்டு சிறப்பு சொற்பொழிவுகள் மற்றும் விசேஷ பூஜைகள் நடந்தது,

இந்த 47 வது ஜெயந்தி விழாவில் கலந்து கொண்டு ஸ்ரீ விஸ்வரூப சாஸ்தா சித்தரை தரிசித்த பக்தர்களுக்கு பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டது. தொடர்ந்து நண்பகல் 12:00 மணி அளவில் அறுசுவை உணவு விருந்தாக பரிமாறப்பட்டது குறிப்பிடத்தக்கது. இந்த விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஸ்ரீவிஸ்வரூப சாஸ்தா சித்தர் பீட தீவிர பக்தர்கள் செய்திருந்தனர்.

பொன்னமராவதி அருகே

# சமையல் செய்தபோது குடிசை வீட்டில் தீப்பிடித்து தாய்-மகள் உடல் கருகி பலி



**புதுக்கோட்டை, மார்ச் 30:** புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி சிவப்பிரகாசம் நகர் பகுதியைச் சேர்ந்தவர் அழகேசன். பித்தளை பட்டறையில் தொழிலாளியாக வேலை பார்த்து வருகிறார். இவரது மனைவி மீனாட்சி (வயது 40). இந்த தம்பதிக்கு பொன்னமராவதி அருகே புதுப்பட்டி அருகே அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 8-ம் வகுப்பு படித்து வரும் சங்கரி (13) உள்பட இரண்டு மகள்கள் இருந்தனர். குடும்ப வறுமை காரணமாக அவர்கள் அனைவரும் குடிசை வீட்டில் வாடகைக்கு வசித்து வந்தனர்.

இந்நிலையில் நேற்று மாலை மீனாட்சி மற்றும் அவரது இளைய மகள் மகள் சங்கரி (13) ஆகியோர் வீட்டில் மண்ணெண்ணெய் அடுப்பில் சமையல் செய்து கொண்டிருந்தனர். அப்போது எதிர்பாராதவிதமாக வீட்டின் கூரையில் தீப்பற்றியது. வெயிலின் தாக்கம் காரணமாகவும், அந்த பகுதியில் காற்று சற்று பலமாக வீசியதாலும் கூரையின் பற்றிய தீயானது அடுத்த ஒருசில விநாடிகளில் வீடு முழுவதும் தீப்பிடித்து எரிந்தது.

இதைப்பார்த்த அக்கம் கக்கத்தினர் அவர்களை மீட்க போராடினர். ஆனால் அருகில் கூட நெருங்கமுடியாத அளவுக்கு தீ எரிந்தது.

தீ விபத்தில் மீனாட்சி மற்றும் சங்கரி ஆகியோர் 70 சதவீதம் எரிந்து படுகாயமடைந்து உயிருக்கு போராடினர். பின்னர் அவர்கள் இருவரும் பொன்னமராவதி அரசு பாப்பாயி ஆச்சி மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் அவர்கள் மேல் சிகிச்சைக்காக பொன்னமராவதி தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தநிலையில் தீக்காயம் அடைந்த இருவரும் நேற்று அதிகாலை அடுத்தடுத்து பரிதாபமாக சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

# சிவகங்கை தொகுதியை காங்கிரஸ் பெற தீவிர முயற்சி



**சிவகங்கை மார்ச் 30:** சிவகங்கை தொகுதியை நடிகர் கருணாஸுக்கு ஒதுக்கியதால், காங்கிரஸார், திமுகவினர் பெரிதும் ஏமாற்றம் அடைந்தனர். சிவகங்கை தொகுதியில் நடைபெற்ற 16 தேர்தல்களில் 1952, 1957, 1962, 1977, 1980, 1984 6 தேர்தல்களில் காங்கிரஸ் வெற்றி பெற்றுள்ளது.

அதன்பின்னர், 2006-ல் திமுக கூட்டணியில் காங்கிரஸ் சார்பில் முன்னாள் எம்எல்ஏ ராஜசேகரன் சீட் கேட்டார். ஆனால், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஒதுக்கப்பட்டது. இதனால், ராஜசேகரன் சுயேச்சையாக போட்டியிட்டு, இந்திய கம்யூனிஸ்ட் வேட்பாளர் குணசேகரனிடம் தோல்வி அடைந்தார். கடந்த 2011 தேர்தலில் திமுக கூட்டணியில் காங்கிரஸ் சார்பில் ராஜசேகரனுக்கு சீட் வழங்கப்பட்டது.

அப்போதும் அதிமுக கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் வேட்பாளர் குணசேகரனிடம் தோல்வி அடைந்தார். கடந்த 2021 தேர்தலில் சிவகங்கையை காங்கிரஸுக்கு கேட்டு, அக்கட்சியினர் முயற்சி எடுத்தனர். ஆனால், அப்போது திமுக கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட்டுக்கு ஒதுக்கப்பட்டது. இதனால், இந்தமுறை எப்படியும் காங்கிரஸுக்குசிவகங்கையைபெற வேண்டுமென, அக்கட்சியினர் தலைமையை வலியுறுத்தி வந்தனர். அக்கட்சியில் முன்னாள் மத்திய இணை அமைச்சர் இ.எம்.சுதர்சனநாச்சியப்பன், மாநிலப் பொதுச் செயலாளர் சி.ஆர்.சுந்தர்ராஜன், மாவட்டத் தலைவர் சஞ்சய்காந்தி, முன்னாள் மாவட்டத் தலைவர் ராஜரெத்தினம் ஆகியோர் சீட் கேட்டு விருப்ப மனு அளித்தனர்.

இதில் சிவகங்கை தொகுதியில் உள்ள பச்சேரி ஊராட்சியை சேர்ந்த காங்கிரஸ் மாநில பொதுச் செயலாளர் பச்சேரி சிஆர் சுந்தரராஜன் இத் தொகுதி முழுவதும் தனது சொந்த செலவில் நல திட்டங்கள் மற்றும் சமுதாய கூடம், பயணியர் நிழற்குடை மற்றும் ஏராளமான கிராமங்களில் உயர் மின் கோபுர விளக்கு நூற்றுக் கணக்கான கோவில் விழாக்களில் சிறப்பு அன்னதானம் ஏற்பாடுகளை செய்து தொகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றார். கொரணா காலத்தில் இப்பகுதியில் உள்ள அனைத்து கிராமங்களிலும் வீடுகள் தோறும் இலவச அரிசி வழங்கினார். இவருடைய சேவைகளை ஏராளமான சமூக அமைப்புகள் பாராட்டினார்கள்.

முன்னாள் மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் எம்பி, சிவகங்கை தொகுதி எம்பி கார்த்தி சிதம்பரம், திமுக கூட்டுறவு துறை அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன் ஆகியோர் வாழும் வள்ளல் என பாராட்டி உள்ளனர்.

இந்நிலையில், சி.ஆர். சுந்தர் ராஜன், முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் பிறந்தநாளை பல லட்ச ரூபாய் செலவழித்து மிகப் பிரம்மாண்டமான முறையில் விழா நடத்தியதோடு, 5,000 பேருக்கு அன்னதானம் வழங்கினார்.

அதோடு, பெரும் தொகை செலவிட்டு பல கிராமங்களில் உயர் கோபுர மின்விளக்குகளையும் அமைத்துக் கொடுத்தார். தொடர்ந்து, கோவில்களுக்கு அன்னதானம் வழங்கியதோடு, கட்சியினருக்கு பொங்கல் சீதனமும் வழங்கினார்.


கடந்த மாதம் ப.சிதம்பரம், அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், கார்த்தி சிதம்பரத்தை அழைத்து வந்து கீழப்பூங்குடியில் பிரம்மாண்டமான முறையில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவை நடத்தினார். மேலும், அவருக்கு ப.சிதம்பரம். கார்த்தி சிதம்பரம் ஆதரவு இருப்பதால் எப்படியும் சீட் கிடைத்துவிடும் என்று காங்கிரஸார் கருதி வந்தனர்.

ஆனால், முக் குலத்தோர் புலிப்படை கட்சித் தலைவரான நடிகர் கருணாஸுக்கு சிவகங்கையை ஒதுக்கியதால், காங்கிரஸார் பெருத்த ஏமாற்றமடைந்தனர். சிவகங்கை தொகுதி சார்ந்தவர்க்கு வெற்றி வாய்ப்பு உள்ள காங்கிரஸ் மாநில பொதுச் செயலாளர் பச்சேரி சிஆர் சுந்தரராஜன்க்கு தொகுதியை பெற முன்னாள் மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம், சிவகங்கை பாராளுமன்ற உறுப்பினர் கார்த்திசிதம்பரம் மற்றும் மாநில காங்கிரஸ் முக்கிய நிர்வாகிகள் சிவகங்கை தொகுதியை காங்கிரஸ்க்கு மீட்டு தர டெல்லியில் தீவிரமாக முயற்சி செய்து வருகின்றனர். காங்கிரஸ் மற்றும் திமுக தொண்டர்கள் ஆர்வமாக உள்ளனர்.

# TVK வேட்பாளர் பட்டியல் வெளியீடு - பெரம்பூர், திருச்சி கிழக்கு தொகுதிகளில் களம் காணும் விஜய்

**சென்னை, மார்ச் 30:** தமிழக அரசியலில் களம் இறங்கி முதன் முதலாக தேர்தலை சந்திக்கிறது விஜயின் தமிழக வெற்றிக்கழகம் கட்சி. இக்கட்சி 234 தொகுதிகளிலும் தனித்து களம் காண்கிறது. இதனால் 234 தொகுதிக்கும் வேட்பாளர்களை தேர்வு செய்யும் பணியில் த.வெ.க. தலைவர் விஜய் தீவிரமாக ஈடுபட்டார். இதனை தொடர்ந்து நேற்று முன்தினம் த.வெ.க வேட்பாளர் பட்டியல் வெளியாகும் என அறிவிக்கப்பட்டு இருந்த நிலையில், தவிர்க்க முடியாத காரணத்தால் தள்ளிவைக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள தனியார் ஓட்டலில் தமிழக வெற்றிக்கழகம் போட்டியிடும்



234 தொகுதிகள் வேட்பாளர்கள், புதுச்சேரியில் போட்டியிடும் வேட்பாளர்களை இன்று த.வெ.க. தலைவர் விஜய் அறிவித்து அறிமுகம் செய்து வைத்தார்.

அனைவராலும் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட த.வெ.க. தலைவர் விஜய் பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு ஆகிய தொகுதிகளில் போட்டியிடுகிறார்.

தியாகராயநகரில் புஸ்சி ஆனந்த், வில்லிவாக்கத்தில் ஆதவ் அர்ஜுனா, ஆயிரம் விளக்கில் ஜே.சி.டி.பிரபாகர், மயிலாப்பூரில் வெங்கட்ராமன் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

முன்னதாக வேட்பாளர்கள் அறிமுக கூட்ட மேதையில் த.வெ.க. கொள்கைத் தலைவர்களின் புகைப்படங்களக்கு விஜய் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

த.வெ.க. வேட்பாளர்கள் அனைவரும் நாளை ஒரேநாளில் தங்கள் வேட்புமனுக்களை தாக்கல் செய்ய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அதன்படி, பெரம்பூர் தொகுதியில் போட்டியிடும் விஜயும் நாளை தனது வேட்புமனுவை தாக்கல் செய்ய உள்ளதாக கூறப்படுகிறது.

# விடுமுறை தினமான நேற்று திருச்செந்தூர் கோவிலில் குவிந்த பக்தர்கள்



**திருச்செந்தூர், மார்ச் 30:** முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் 2-ம் படைவீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் சிறந்த பரிகார தலமாகவும், ஆன்மீக சுற்றுலா தலமாகவும் விளங்கி வருகிறது.

இங்கு நாள்தோறும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் மட்டு மல்லாமல் கேரளா, ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் இருந்தும் திருவிழா நாட்கள் மட்டுமல்லாமல் விடுமுறை நாட்களில் வந்து சாமி தரிசனம் செய்து செல்கின்றனர்.

தற்போது திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு வருகை தரும் பக்தர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஞாயிறு விடுமுறை நாளான நேற்று அதிகாலையில் இருந்தே பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கோவிலில் குவிந்தனர். அவர்கள் கடல் மற்றும் நாழிக்கிணறு புனித தீர்த்தத்தில் நீராடி பொது மற்றும் ரூ.100 கட்டண வரிசையில் சுமார் 3 மணி நேரம் காத்திருந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

நேற்று காலை ஏராளமான பக்தர்கள் கோவிலில் குவிந்ததால் கோவில் வளாகம், கடற்கரை உள்ளிட்ட இடங்களில் அதிக அளவில் பக்தர்கள் கூட்டம் காணப்பட்டது.

விடுமுறை தினத்தை முன்னிட்டு நேற்று கோவில் நடை அதிகாலை 4 மணிக்கு திறக்கப்பட்டது. 4.30 மணிக்கு விஸ்வரூப தீபாராதனையும், 6 மணிக்கு உதயமார்த்தாண்ட அபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து மற்ற கால பூஜைகள் நடக்கிறது.

# புதிய தமிழகம் கட்சியின் முதற்கட்ட வேட்பாளர் பட்டியல் வெளியீடு



**நெல்லை, மார்ச் 30:** சட்டமன்ற தேர்தலில் தனித்துப் போட்டியிடும் புதிய தமிழகம் கட்சியின் வேட்பாளர்களை கிருஷ்ணசாமி அறிவித்துள்ளார்.

அதன்படி, புதிய தமிழகம் கட்சியின் முதற்கட்ட வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

60 முதல் 70 தொகுதிகள் வரை போட்டியிட முடிவு செய்யப்பட்ட நிலையில், முதற்கட்டமாக 43 தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் அறிவிக்கப் பட்டுள்ளது. இதில், ஒட்டப் பிடாரத்தில் கிருஷ்ணசாமி போட்டி யிடுகிறார்.

ஸ்ரீவில்லிப்புத்தூர் மற்றும் நெல்லை தொகுதிகளில் கிருஷ்ணசாமியின் மகன் ஷியாம் கிருஷ்ணசாமி போட்டியிடுகிறார்.

# எஸ்டிபிஐ சார்பில் திமுக சின்னத்தில் நெல்லை முபாரக் போட்டி!

**நன்னிலம், மார்ச் 30:** 2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான கூட்டணியில் இடம்பெற்றுள்ள இந்திய சமூக ஜனநாயக கட்சிக்கு ஒரு தொகுதி ஒதுக்கப்பட்டது.

எஸ்டிபிஐ-யுடன் சேர்த்து மனிதநேய ஜனநாயக கட்சி மற்றும் முக்குலத்தோர் புலிப்படை ஆகிய கட்சிகளுக்கும் தலா ஒரு தொகுதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தொகுதி ஒதுக்கப்பட்ட நிலையில், எஸ்டிபிஐக்கு நன்னிலம் தொகுதி இறுதி செய்யப்பட்டது. இந்நிலையில்



எஸ்டிபிஐ சார்பில் நன்னிலம் தொகுதியில் அக்கட்சியின் தலைவர் நெல்லை முபாரக் போட்டியிடுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

# விபத்தில் மூளைச்சாவு- வாலிபரின் உடல் உறுப்புகள் தானத்தால் 6 பேருக்கு மறுவாழ்வு

**திண்டுக்கல், மார்ச் 30:** திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் தாலுகா, எஸ். பாறைபட்டியைச் சேர்ந்தவர் மலர்க்கண்ணன் மகன் அருண்பாண்டியன் (வயது34). இவர் கடந்த மார்ச் 19-ம் தேதி திண்டுக்கல்-பழனி நெடுஞ்சாலையில் சென்றபோது எதிர்பாராத விதமாக சாலை விபத்தில் சிக்கினார். பலத்த காயமடைந்த அவர் கடந்த 9 நாட்களாக தனியார் ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில், சிகிச்சை பலனின்றி மூளைச்சாவு அடைந்ததாக டாக்டர்கள் அறிவித்தனர்.



சோகத்திலும் துணிச்சலான முடிவெடுத்த அருண் பாண்டியனின் குடும்பத்தினர், அவரது உடல் உறுப்புகளை தானம் செய்ய முன்வந்தனர். அதன்படி அறுவை சிகிச்சை மூலம் 5 வகையான உறுப்புகள் எடுக்கப்பட்டு கல்லீரல் மதுரை பாரதி இன்பினிட்டி மருத்துவமனை, இடது சிறுநீரகம் மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனை, வலது சிறுநீரகம் திருச்சி காவேரி மருத்துவமனை, கண் கருவிழி மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை, தோல் மதுரை கிரேஸ் கென்னட் மருத்துவமனைக்கும் அனுப்பப்பட்டன.

# விசுவாசத்திற்கு பரிசு? பணியாளரின் மகனை வேட்பாளராக அறிவித்த விஜய்



**சென்னை, மார்ச் 30:** தமிழக அரசியலில் களம் இறங்கி முதன் முதலாக தேர்தலை சந்திக்கிறது விஜயின் தமிழக வெற்றிக் கழகம் கட்சி. இக்கட்சி 234 தொகுதிகளிலும் தனித்து களம் காண்கிறது. இதனால் 234 தொகுதிக்கும் வேட்பாளர்களை தேர்வு செய்யும் பணியில் த.வெ.க. தலைவர் விஜய் தீவிரமாக ஈடுபட்டார்.

இதனைத் தொடர்ந்து சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள தனியார் ஓட்டலில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் 234 தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்கள், புதுச்சேரியில் போட்டியிடும் வேட்பாளர்களை த.வெ.க. தலைவர் விஜய் நேற்று அறிவித்து அறிமுகம் செய்து வைத்தார். அதன்படி விருகம்பாக்கம் தொகுதியின் த.வெ.க. வேட்பாளராக சபரிநாதன் அறிவிக்கப்பட்டுள்ளார்.

சபரிநாதனின் தந்தை ராஜேந்திரன், விஜய்யிடம் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக பணிபுரிந்து வருகிறார். முதலில் விஜயின் ஓட்டுநராக இருந்த ராஜேந்திரன் தற்போது அவரது நிழலாக இருப்பதாக கூறப்படுகிறது.

தனக்கு நெருங்கிய வட்டாரத்தில் ஒருசிலருக்கு மட்டும் விஜய் இடம்கொடுத்து வைத்திருக்கிறார். அவர்களில் ஒருவர் ராஜேந்திரன்.

அந்த வகையில் ராஜேந்திரன் மீதான அன்பை வெளிக்காட்டும் விதமாக அவரது மகன் சபரிநாதனுக்கு விஜய் வாய்ப்பளித்துள்ளார். தன் சார்பில் தனிப்பட்ட முறையில் விஜய் தேர்வு செய்த வேட்பாளர்களில் ஒருவராக சபரிநாதன் இடம்பெற்றுள்ளதாக தெரிகிறது.

மேடைக்கு தந்தையுடன் சென்று விஜய்யை சந்தித்த போது சபரிநாதன் கண்கலங்கிய காட்சிகள் சமூக வலைத்தளங்களில் தற்போது அதிகம் பகிரப்படுகிறது.

## செக்யூரிட்டி கார்டுகள் தேவை

கோடம்பாக்கம் சேத்துப்பட்டு புரசைவாக்கம் கோட்டூர்புரம் பகுதிகளில் வேலை செய்ய செக்யூரிட்டி கார்டுகள் தேவை

அணுகவும்: 9840861539

## ADVERTISE WITH US

CONTACT US
9438610756

## WANTED: FEMALE ANCHORS

- Age 18 to 35
- Good Looking
- Work from Home (Full-time/Part-time)

Salary: Rs. 20,000 to 50,000

Call / Whatsapp:
7789941009
9337501889

## PLOT SALE

ORAGADAM 11L to 23L
TAMBARAM 51L to 69L
OMR 26L to 51L
ECR 52L to 75L

9626777627

## Special Invitation

to retired seniors house wives businessmen bankers CAs NRIs age.30 to 70.qualification SSLC/graduate

To restart your second Innings with a career business opportunity

- Flexible timing unlimited incentive
- No target work from home training provided

For successful business.

Contact Mr. Irudaya Raj
Ph.9486634780

## Vilambaram

Boost your business

We provide Targeted Leads to grow your buisness

Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com

## keerthi foundation

De Addiction Cum Rehabilitation Centre

INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers

Internship:
- Clinical Training
- Counseling Practice
- Case Work

Jobs:
- Social Worker
- Jr Psychologist
- Rehab Counselor

Build Your Career in De-Addiction & Mental Health Care

Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com

## ஆட்கள் தேவை

வார சம்பளத்திற்கு லேபர் வேலைக்கு ஆட்கள் தேவை

உணவு மற்றும் தங்கும் இடம் இலவசம்

OMR பெருங்குடி சென்னை

Contact 9790979539

## WANTED

JAY SECURITY FORCE

பணி வாய்ப்புகள்

- பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
- இடங்கள்:
  - பெருங்குடி, துரைப் பாக்கம்
  - காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
  - விருகம்பாக்கம்

பெண்கள் தேவை

சம்பளம்:- 12500 முதல் 20000 வரை

9791061354 - 8072969599

Head office
NO :1, அம்பாள் அவின்யூ, வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம், மேட்டுக்குப்பம்- சென்னை-97

## PREMIUM LAND SALE NEAR PARANDUR AIRPORT

YOU ARE LUCKY!
Grab Your Future Investment Today!
Location: Just 6 KM Near Parandur New Airport

Price Details
- ₹700 to ₹2200 per Sq.Ft
- Affordable & High Return Investment

Why Invest Here?
- Fast Developing Area
- Near Upcoming Airport
- Excellent Appreciation Value
- Suitable for Residential & Investment
- Easy Road Access

PLOTS AVAILABLE NOW!
Contact: CT. Guruji
Phone: 90031 32847
LIMITED PLOTS – BOOK NOW!

## WANTED

Site Supervisor required for construction work in Ambattur

Contact: 8428872887

## WANTED

Needed female staff to look after children, patients.

Contact
9150989424

## SEVEN STARS LOGISTICS PVT.LTD.

we simplify shipping for your business

Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.

# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com

## just499® MLM SOFTWARE

All Types of MLM Software Solutions Available

Binary Unilevel Matrix Board Generation ROI / Investment

ONLY Rs. 499

Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

## Sri Manjal Mart

தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க

20% OFF

www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

## SUPREME CAR WASH

THE BEST CENTRE OF CAR WASH

SADHANA DEVI.K

Car Wash & Detailing

- Car Foam Pressure Wash
- Teflon Coating
- Ceramic Wax Treatment
- Under Chassis Painting
- Interior Foam Wash / Stain Remover
- Paint Correction / Protection

We Done Here

9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com

No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.

## WANTED

M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift

7540003588

## அருள்தரும் தெய்வம்

என்றும் நம் இல்லங்களில்

அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..

www.arultharumdeivam.com

## WANTED

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact
8248951872

# கவிதை அரங்கம்!





நானிருக்கின்றேனென்று
சொல்லாமல் சொல்லும்
உன் அரவணைப்பில்
உடைந்த மனமும்
நிறைந்தது

வானவில்லிலும்
காணாத
அழகிய நிறம்
உன்னில் கண்டேன்

சிக்கெடுக்கும்போது
மனம் சிக்கிக்கொண்டது
நீ கூந்தல்
கலைத்து விளையாடும்
நினைவுகளில்...!

# வாழ்க்கை தத்துவம்...



நாம் தேவையில்லை
என்று சிலர் நினைக்க
துவங்கும் முன்
விலகி நிற்க கற்று
கொள்வது சிறந்தது

சுமக்கத் தெரிந்து கொண்டால்
சுமைகளும் சுலபம் தான்
சாதிக்க பழகிவிட்டால்
தடைகளும் சவால்தான்

பிறப்பு இறப்பு மட்டுமே
நம்மை தேடி வரும்
மற்றவற்றை நாம் தான்
தேடி செல்ல வேண்டும்

பேச வேண்டிய நேரத்தில்
மட்டும் பேசினால் உங்கள்
வாழ்க்கை இனிமையாக இருக்கும்

# நாயும் நன்றியும்

வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது அந்தக் குடியிருப்பு. குழந்தைகள் அங்குமிங்கும் ஓடி விளையாடிக் கொண்டிருக்க ,பெரியவர்கள் கிடைத்த நேரத்தைப் பேசிக் கழித்தனர்.

ரமா...... நாளைக்கு உன் பக்கத்து பிளாட்டுக்குக் குடி வராங்களாமே! என்று கேட்ட உமாவிடம்,

ம்.... ஆமாம்பா இதுவரைக்கும் ஃப்ரீயா இருந்தாச்சு இனி வர்றவங்க எப்படி இருப்பாங்கன்னு தெரியல... பார்ப்போம் என்றாள்.

மறுநாள் காலை பக்கத்து வீட்டில் பேச்சுச் சத்தம் கேட்க ரமா வெளியே வந்தாள்.

அதற்குள் அங்கே இருந்த பெரியவர் வணக்கம்மா.... நாங்க தான் இங்க குடி வர்றோம். நாளைக்குக் காலைல பால் காய்ச்சறோம். நீங்க கண்டிப்பா வரணும் என்று அழைத்தார்.

தன் தந்தையை நினைவூட்டிய அவரை வணங்கி அதற்கென்னப்பா கட்டாயம் வருகிறோம் என்றாள்.

சற்று நேரத்திற்கெல்லாம் கதவு தட்டும் சத்தம் கேட்டதும் வெளியே வந்தாள் ரமா.

பக்கத்து வீட்டுக்காரரும் அவரது மனைவியும் வந்திருந்தனர். அவரது மனைவியைப் பார்த்த ரமாவிற்குச் சற்று அதிர்ச்சியாக இருந்தது. சக்கர நாற்காலியில் மனைவியை அமர வைத்து அழைத்து வந்திருந்தார். அவரைக் கண்டதும் அவளுடைய செல்லப் பிராணி டாமி குரைத்து நாற்காலியைச் சுற்றிச் சுற்றி வந்தது.

இவள் எவ்வளவு சொல்லியும் அது குறைப்பதை நிறுத்தவில்லை. அவர்களும் குடி வந்து ஒரு மாதம் ஆகிவிட்டது. ஒவ்வொரு முறை அவர்கள் வரும்போதும் டாமியும் அவரது நாற்காலியைச் சுற்றி வந்தும் குறைத்துக் கொண்டும் இருந்தது. ஏனோ இருவருக்குமிடையே இடைவெளி இருப்பது போல் இருந்தது. அனைவரையும் பார்த்து நட்புணர்வோடு குரைக்கும் டாமிக்கு ஏனோ இந்தப் பெண்ணிடம் ஒட்டவில்லை.

ஒரு நாள் இரவு சுமார் 11 மணி இருக்கும் டாமி மிகவும் உடல் நலமில்லாமல் சுருண்டு போனது. அவள் கணவரும் ஊரில் இல்லாத நிலையில் என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தாள்.

ஆனால் பக்கத்து வீட்டுப் பெண் தனக்குத் தெரிந்த கால்நடை மருத்துவரைத் தொடர்பு கொண்டு மருத்துவம் பார்க்க ஏற்பாடு செய்தார்.


தொடர்ந்து ஒரு வாரமும் இது தொடர அந்தப் பெண்ணின் உதவியால் டாமி நன்றாக ஓடியாடி விளையாட ஆரம்பித்தது.

டக்...டக்.... கதவு தட்டும் சத்தம் கேட்டது.

கதவைத் திறந்த ரமா பக்கத்து வீட்டுப் பெண் வந்திருப்பதைக் கண்டதும் கதவைத் திறந்து உள்ளே அழைத்தாள்.

டாமி குறைக்கும் என்று நினைத்தவள் அது சக்கர நாற்காலியைச் சுற்றி வருவதைக் கண்டு ஆச்சரியப்பட்டாள்.

அந்தப் பெண் செய்த உதவியை டாமி எப்படிப் புரிந்து கொண்டது? மனிதர்களே நன்றி மறக்கும் இந்தக் காலத்தில் உதவியின் பலனை உணர்ந்த டாமியின் மேல் ஏனோ இன்னும் அன்பு அதிகமானது.



**தமிழ்நிலா**

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*13. டன் கணக்கில் துணி துவைக்கும் இடம் எது.?*

*விடை: Washing(Ton) தான்.*

*14. எல்லா ஆவியையும் பிடிக்கலாம் ஆனால் ஒரே ஒரு ஆவியை மட்டும் பிடிக்க முடியாது அது என்ன..?*

*விடை: கொட்டாவி.*



# தினம் ஒரு சமையல்



## கருணை கிழங்கு வறுவல்

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| 1/2 | -கருணை கிழங்கு |
| 1 ஸ்பூன் | -மிளகாய் தூள் |
| 1ஸ்பூன் | -மல்லி தூள் |
| 4 ஸ்பூன் | -கார்ன் மாவு |
| 1/2 ஸ்பூன் | -மஞ்சள் தூள் |
| தேவையானஅளவு | -உப்பு |
| தேவையான அளவு | -பொரிக்க ஆயில் |
| 1 ஸ்பூன் | -இஞ்சி பூண்டு விழுது |

செய்முறை:

கருணை கிழங்கு தோல் சீவி குச்சி குச்சி ஆக கட் செய்து கொள்ள வேண்டும்.....

அதனுடன் கான்பிளவர் மாவு இஞ்சி பூண்டு பேஸ்ட் மஞ்சள் தூள் மிளகாய் தூள் மல்லித்தூள் உப்பு அனைத்தையும் நன்றாக சேர்த்துக் கொள்ள வேண்டும்......



இரண்டு அல்லது மூன்று ஸ்பூன் தண்ணீர் விட்டு பிசைந்து கொள்ளவேண்டும் அதிகமாக தண்ணீர் சேர்க்கக் கூடாது

அரை மணி நேரம் அப்படியே ஊறவிட வேண்டும்

அதன் பிறகு எண்ணெயில் பொரித்தெடுக்கவும் கருவேப்பிலை எண்ணெயில் வறுத்து சேர்த்துக் கொள்ளவும் இறுதியாக எலுமிச்சை பிழிந்து விட்டு சாப்பிட்டால் நன்றாக இருக்கும்....

# வெள் எருக்கு பயன்கள்



தமிழகத்தில் எல்லாப் பகுதிகளிலும் தானே வளர்வது. வெள்ளை மலர்களையுடைய வெள்ளெருக்கே மருத்துவத்திற்குச் சிறந்ததாகக் கருதப்படுகிறது. இலை, பூ, பால், பட்டை, வேர் முதலியன மருத்துவப் பயனுடையது.

இலை நஞ்சு நீக்குதல், வாந்தியுண்டாக்குதல், பித்தம் பெருக்குதல், வீக்கம்-கட்டிகளைக் கரைத்து வேதனை குறைத்தல் ஆகிய குணங்களையுடையது. பூ, பட்டை ஆகியவை கோழையகற்றுதல், பசியுண்டாக்குதல், முறைநோய் நீக்குதல் ஆகிய பண்புகளையுடையது. பால் புண்ணுண்டாக்கும் தன்மை கொண்டது.

வெள்ளெருக்கம்பூ ஆஸ்துமா, மார்புச்சளி ஆகியவற்றுக்குச் சிறந்தது. குப்பை மேடுகளிலும் தரிசு நிலங்களிலும் காணப்படும் எருக்கன் செடியை விஷ செடி என்று நாம் ஒதுக்கி விடுகிறோம். எருக்கன் செடியில் பூக்கும் பூக்களில் எண்ணற்ற மருத்துவ குணங்கள் கொண்டுள்ளன. விஷக்கடிக்கு மருந்தாக பயன்படும் இந்த பூக்கள் சிறுநீரக கோளாறுகளை மூன்று நாட்களில் குணமடையும்.

வெள்ளெருக்கு, நீல எருக்கு, ராம எருக்கு என ஒன்பது வகையான எருக்குகள் இருக்கின்றன என சித்தவைத்தியர்கள் கூறுகின்றனர். எருக்கஞ்செடி 12 ஆண்டுகள் மழையில்லாமல் இருந்தாலும் கூட, சூரிய ஒளியிலுள்ள தண்ணீரை கிரகித்து வளரும் தன்மை கொண்டது. அதன் பருவகாலத்தில் பூத்து, காய்த்து, வளர்ந்துவிடும். இதில் விஷேச அம்சம் கொண்டதுதான் வெள்ளெருக்கு. இதை வீட்டிலும் வளர்க்கலாம்.

புதர்செடி வகையைச் சேர்ந்த வெள்ளெருக்கு வேர் பாம்புக்கு ஆகாது என்று சொல்லியிருக்கிறார்கள். சக்தி வாய்ந்த வெள்ளெருக்குச் செடியின் இலை, பூ, பால், பட்டை, வேர் முதலியன மருத்துவப் பயனுடையது.

பலவிதமான நோய்களுக்கான தீர்வை தன்னுள் வைத்துக் கொண்டிருக்கும் இந்த எளிய செடியின் மருத்துவ குணங்களைத் தெரிந்துகொண்டால், ஆச்சரியத்தில் விழிகளை விரிப்பீர்கள்.

# சினிமா

## தமிழ்நாட்டில் துரந்தர் 2 திரைப்படம் செய்துள்ள வசூல்.. பாக்ஸ் ஆபிஸ் ரிப்போர்ட்



இயக்குநர் ஆத்தியா தார் இயக்கத்தில் பிரம்மாண்ட பொருட்செலவில் உருவாகி கடந்த ஆண்டு வெளிவந்த படம் துரந்தர். இப்படத்தில் ரன்வீர் சிங், சாரா அர்ஜுன், அக்ஷய் கண்ணா, மாதவன், அர்ஜுன் ராம்பால் ஆகியோர் நடித்திருந்தனர்.

இப்படத்தின் மாபெரும் வெற்றியை தொடர்ந்து துரந்தர் பார்ட் 2 திரைப்படத்தை எதிர்பார்த்து ரசிகர்கள் காத்திருந்தனர். அதன்படி, கடந்த வாரம் வெளிவந்த துரந்தர் 2 திரைப்படம் கலவையான விமர்சனங்களை பெற்றாலும் முதல் நாளில் இருந்து வசூலில் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

இதுவரை உலகளவில் ரூ. 1000 கோடிக்கும் மேல் துரந்தர் 2 வசூல் செய்து மாபெரும் சாதனை படைத்துள்ளது. இதன்மூலம் இந்திய சினிமாவில் 10வது ரூ. 1000 கோடி வசூல் செய்த படமாக டாப் 10ல் துரந்தர் 2 இணைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், தமிழ்நாட்டில் துரந்தர் 2 திரைப்படம் செய்துள்ள வசூல் குறித்து தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படம் தமிழ்நாட்டில் மட்டுமே ரூ. 22 கோடி வசூல் செய்துள்ளதாக கூறப்படுகிறது.



இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கும் நடிகை சம்யுக்தா தனது லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை அதில் பதிவு செய்வார். அந்த வகையில் தற்போது ட்ரான்ஸ்பரென்ட் சேலையில் எடுத்துக்கொண்ட போட்டோஷூட் புகைப்படங்களை இன்ஸ்டாவில் பதிவிட்டுள்ளார். இதோ பாருங்க:

## வில்லாதி வில்லன் நடிகர் பிரகாஷ் ராஜின் பிறந்தநாள்.. அவருடைய சொத்து மதிப்பு எவ்வளவு தெரியுமா?



தமிழ் சினிமா மட்டுமின்றி தென்னிந்திய அளவில் சிறந்த வில்லன் நடிகர்களில் ஒருவராக பிரகாஷ் ராஜ் இருக்கிறார். இவர் தமிழில் வெளிவந்த கில்லி, சிங்கம், போக்கிரி போன்ற பல படங்களில் தனது வில்லத்தனமான நடிப்பின் மூலம் ரசிகர்களை கவர்ந்துள்ளார்.

அதே போல், அபியும் நானும், பயணம், இருவர், திருச்சிற்றம்பலம் போன்ற படங்களில் தனது யதார்த்தமான நடிப்பிலும் பட்டையை கிளப்பியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அடுத்ததாக விஜய்யுடன் இணைந்து ஜனநாயகன் திரைப்படத்திலும் நடித்திருக்கிறார். இப்படம் சட்டமன்ற தேர்தல் முடிந்தபின் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரையுலக நட்சத்திரங்களின் நெட் ஓர்த், அதாவது சொத்து மதிப்பு குறித்து அவ்வப்போது தகவல் வெளியாகும். அந்த வகையில், நடிகர் பிரகாஷ் ராஜின் பிறந்தநாளான இன்று அவருடைய சொத்து மதிப்பு குறித்து விவரம் வெளியாகியுள்ளது.

அதன்படி, இவருடைய மொத்த சொத்து மதிப்பு ரூ. 50 கோடி என கூறப்படுகிறது. மேலும், இவர் ஒரு திரைப்படத்தில் நடிக்க ரூ. 2.5 கோடி வரை சம்பளம் வாங்கி வருகிறாராம்.

# கௌசிக சுப்ரமணியர் ஆலயம்

பாண்டிச்சேரி பெயர் கூறியவுடன் பரவலாக அனைவரும் அறியப்பட்டது மதுபானம் ஆகும். ஆனால் அதை எல்லாம் தாண்டி ஆன்மீகம், கடவுள் நம்பிக்கை, மதமற்ற நிலை, மக்களிடையே பாசம், விருந்தோம்பல் என் நிறைய உண்டு.

அதை பற்றிய தெளிவான ஒரு தகவல் தான் இங்கு பதிவிடுகிறேன்.

இங்கு ரயில் நிலையம் அருகில் கௌசிக சுப்ரமணியர் ஆலயம் உள்ளது.

இதில் முக்கிய அம்சம் என்னவென்றால் இந்த முருகன் கோவிலுக்கு நிலத்தை கொடுத்தவர் இஸ்லாமிய மதத்தை சேர்ந்த " முகமது கௌசி" என்பவர். இளவயதில் முருகன் மீது தீராக்காதல் கொண்டமையால் வருடந்தோறும் இங்கு மாசிமகத் திருவிழா வெகு விமரிசையாக நடைபெறும். எந்த கிழமையில் மாசி மகம் வந்தாலும் அன்று உள்ளூர் விடுமுறை அறிவிப்பார்கள்.

திரு. கௌசிக் அவர்கள் இளவயதில் மாசி மக விழாவில் முருகன் வழிபாட்டிற்காக எந்த ஊர் முருகனாக இருந்தாலும் சரி முன்னிலையில் நின்று முருகன் தனக்கே உரியவன் என்று ஆராதிப்பார்.





அப்போது இங்கு பாண்டிச்சேரி மேயராக இருந்த திரு. எதுவார் குபேர்( கிறிஸ்தவ மதம்) அவர்கள் இவரிடம் என்ன வேண்டும் என கேட்க முருகனுக்கு கோவில் கட்டும் தனது அவாவினை கூறியுள்ளார்.

ஆளுநர். திரு. பி.டி. ஜாட்டி என்பவர் அடிக்கல் நாட்டி இம்முருகன் கோவில் கட்டி முடிக்கப்பட்டது. இவ்விஷயங்கள் அனைத்தும் கேள்விப்பட்ட காஞ்சிபுரம் சங்கராச்சாரியார் இக்கோவிலுக்கு "கௌசிக பாலசுப்பிரமணியர் திருக்கோவில்" என் பெயர் சூட்டினார்.

பாண்டிச்சேரி மக்களால் ," கௌச் கோவில்; பாய் முருகன் கோவில்" இன்றும் அழைக்கப்படுகிறது.

2003ல் திரு. கௌஸ் அவர்கள் வயது மூப்பின் காரணமாக உயிரிழந்தார். அன்று முதல் அவரின் மகன் இக்கோவிலை நிர்வகித்து வருகின்றார்.

இன்றும் கோவிலின் பிரகாரத்தில் திரு. கௌஸ் அவர்களின் புகைப்படம் காணலாம்.

இக்கோவிலுக்கு திருமணமாகாதவர்கள் வந்தால் விரைவில் சுபசெய்தி கிடைக்கும்.. குழந்தை பேறு, குழந்தைகள் படிப்பு, வீடு கட்ட என அனைத்திற்கும்.....

மூன்று வேளைகளிலும் நேரம் மற்றும் தேவைக்கு தகுந்தது போல நைவேத்தியங்கள் செய்யப்படுகிறது.

இங்கு மூலவரை பார்க்க சுவாமிமலை முருகன்( மூலவர்) மாதிரி இருக்கும். சுவாமிமலை யில் உயரம் அதிகம் மூலவர்.

நாள் கிழமை என்றால் நல்ல கூட்டம் இருக்கும்.. மிக முக்கியமாக நேரத்தை சரியாக கடைபிடிக்கிறார்கள். அவ்வளவு சுத்தம்........

அல்லா/ முருகன்/ இயேசு என யாரை வேண்டுமானாலும் நினையுங்கள். அந்த பக்தியில் உள்ள தூய்மையோடு நேர்மையாக வேண்டினீர்கள் என்றால் கண்டிப்பாக அவன் துணை உண்டு. கை கொடுப்பான்...

நன்றி



-பானு ஸ்ரீ
பாண்டிச்சேரி..

## தினம் ஒரு தலைவர்கள்

# கேளப்பன் நாயர் வரலாறு



கோயப்பள்ளி கேளப்பன் நாயர் (24 ஆகஸ்ட் 1889 - 7 அக்டோபர் 1971) ஒரு இந்திய அரசியல்வாதி, சுதந்திர ஆர்வலர், கல்வியாளர் மற்றும் பத்திரிகையாளர் ஆவார். இந்திய சுதந்திர இயக்கத்தின் போது, அவர் கேரளாவில் இந்திய தேசிய காங்கிரஸின் முன்னணி நபராக இருந்தார் , மேலும் கேரள காந்தி என்று பிரபலமாக அறியப்பட்டார். இந்திய சுதந்திரத்திற்குப் பிறகு, அவர் காந்திய அமைப்புகளில் பல்வேறு பதவிகளை வகித்தார். அவர் நாயர் சேவை சங்கத்தின் இணை நிறுவனர் மற்றும் முதல் தலைவராகவும் , கேரள க்ஷேத்திர சம்ரக்ஷண சமிதியின் (கோயில் பாதுகாப்பு இயக்கம்) நிறுவனராகவும் இருந்தார். ஆரம்ப கால வாழ்க்கை கேரள மாநிலம் கோழிக்கோட்டில் உள்ள கோயிலாண்டியில் உள்ள முச்சுகுன்னு என்ற சிறிய கிராமத்தில் , நீதிமன்றத்தில் எழுத்தராகப் பணியாற்றிய தென்போயில் கனாரன் நாயர் மற்றும் கோயப்பள்ளி குஞ்சம்மா ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார் கேளப்பன். கேளப்பனுக்கு தாய்வழி வாரிசுரிமை மூலம் கோயப்பள்ளி என்ற குடும்பப் பெயர் கிடைத்தது . அவர் கோழிக்கோடு மற்றும் சென்னையில் கல்வி பயின்றார், மேலும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றார், பின்னர் சங்கனாசேரியில் உள்ள செயிண்ட் பெர்ச்மன்ஸ் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணியைத் தொடங்கினார் . கேளப்பன் நாயர் சேவை சங்கத்தின் நிறுவனத் தலைவராக இருந்தார் , பின்னர் அந்த சங்கத்தால் நடத்தப்படும் ஒரு பள்ளியின் முதல்வரானார். சீர்திருத்தவாதியாக ஒருபுறம் சமூக சீர்திருத்தங்களுக்காகவும் மறுபுறம் ஆங்கிலேயர்களுக்காகவும் அவர் போராடினார். தீண்டாமை மற்றும் சாதி அடிப்படையிலான பாகுபாடுகளுக்கு எதிராக அவர் இடைவிடாமல் போராடினார். கே. குமாருடன் சேர்ந்து , கேரளாவில் சாதி நிலையைக் குறிக்கும் தனது பெயருக்குப் பின்னொட்டை நீக்கிய முதல் நபரானார். அவர் கேரள காந்தி என்று அழைக்கப்பட்டார்.




அனைத்துப் பிரிவு மக்களின் சமத்துவத்திற்காகவும் கேளப்பன் அயராது பாடுபட்டார். வைக்கம் சத்தியாக்கிரக இயக்கத்தில் அவர் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினார், பின்னர் 1932 இல் குருவாயூர் சத்தியாக்கிரகத்தை வழிநடத்தினார். கோயில் நுழைவு பிரகடனத்தை நினைவுகூரும் வகையில் காந்தி திருவிதாங்கூருக்கு விஜயம் செய்தபோது , காந்திஜியின் தலைமையிலும், சமூக சமத்துவத்திற்கான நடவடிக்கையின் உணர்வை மொழிபெயர்க்க காந்திய அணுகுமுறைக்கு இணங்க எடுக்கப்பட வேண்டிய முன்னோக்கிய நடவடிக்கைகளிலும் நம்பிக்கையை மீண்டும் நிலைநாட்டும் மிக முக்கியமான தீர்மானத்தை அவர் ஆதரித்தார். வைக்கம் சத்தியாக்கிரகத்தின் தலைவர்களில் ஒருவரான திருவிதாங்கூரை சேர்ந்த கே. குமார் இந்தத் தீர்மானத்தை முன்வைத்தார் , பின்னர் மக்களாலும் வரலாற்றாசிரியர்களாலும் மறக்கப்பட்டார். சுதந்திரத்திற்குப் பிந்தைய பங்கு சுதந்திரத்திற்குப் பிறகு அவர் காங்கிரஸ் கட்சியை விட்டு வெளியேறினார். அவர் கிசான் மஸ்தூர் பிரஜா கட்சியில் சேர்ந்தார் மற்றும் 1952 இல் பொன்னானி மக்களவைத் தொகுதியிலிருந்து நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தனது பதவிக் காலத்தின் முடிவில், அவர் தீவிர அரசியலை விட்டுவிட்டு சர்வோதய ஊழியரானார் மற்றும் கேரளாவில் பூதான் இயக்கத்துடன் தீவிரமாக தொடர்புடையார். கேளப்பன் மாத்ருபூமியைத் தொடங்க உதவினார் , மேலும் பல ஆண்டுகள் அதன் ஆசிரியராகவும் இருந்தார். கேரளாவை ஒரு புதிய மொழியியல் மாநிலமாக ஒன்றிணைக்க அவர் பாடுபட்டார். கேரள சர்வோதய சங்கம், கேரள காந்தி ஸ்மாரக் நிதி, கேரள சர்வோதய மண்டல் மற்றும் கோழிக்கோடு காந்தி அமைதி அறக்கட்டளை உள்ளிட்ட பல காந்திய அமைப்புகளின் தலைவராகவும் இருந்தார். கேரளாவில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் மலப்புரம் மாவட்டம் உருவாவதை கேளப்பன் எதிர்த்தார், அது ஒரு 'மினி பாகிஸ்தானை' உருவாக்கும் என்று வாதிட்டார். மலப்புரத்தில் உள்ள அங்கடிப்புரத்தில் உள்ள ஒரு மசூதிக்கு அருகில் ஒரு கோயில் மறுமலர்ச்சியை நோக்கமாகக் கொண்ட தாலி கோயில் இயக்கத்தில் அவர் ஈடுபட்டார், இது சில வகுப்புவாத பதட்டங்களை ஏற்படுத்தியது. தாலி கோயில் இயக்கத்தில் கேளப்பன் முக்கிய பங்கு வகித்தார். ஆனால் அது நிறைவடைவதற்கு முன்பே, அக்டோபர் 7, 1971 அன்று கேளப்பன் இறந்தார். அவரது ஆதரவுடன் கட்டப்பட்ட கோயில் மசூதியுடன் இணைந்து நிற்கிறது, இது வெவ்வேறு சமூகங்களுக்கிடையேயான நல்லிணக்கத்தைக் குறிக்கிறது.

விருதுகள் மற்றும் அங்கீகாரம்

அவரது நினைவாக இந்தியா போஸ்ட் 1990 இல் ஒரு நினைவு அஞ்சல் தலையை வெளியிட்டது .

## தேர்தல் ஆணையக் கடிதத்தில் பாஜக முத்திரை பதித்த விவகாரம்! அலுவலர்கள் நீக்கம்

புதுடெல்லி, மார்ச் 30:

கேரளத்தில் தேர்தல் ஆணைய கடிதத்தில் பாஜக முத்திரை பதித்த விவகாரத்தில் இரண்டு தேர்தல் அலுவலர்களைப் பதவியிலிருந்து மாநிலத் தலைமைத் தேர்தல் அலுவலர் ரத்தன் யு கேல்கர் சனிக்கிழமை (மார்ச் 28) நீக்கியுள்ளார்.

முன்னதாக கடந்த மார்ச் 23 ஆம் தேதி, அரசியல் கட்சிகளுக்கு கடந்த 2019 ஆம் ஆண்டு மார்ச் 19 ஆம் தேதியிட்ட கடிதத்துடன் தேர்தல் ஆணையம் அனுப்பிய எழுத்துபூர்வ சான்றில், ஆணையத்தின் முத்திரைக்குப் பதிலாக கேரள பாஜகவின் முத்திரை இருந்தது. இந்தச் சான்றை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தன்னுடைய எக்ஸ் தளப்பக்கத்தில் பகிர்ந்ததைத் தொடர்ந்து சர்ச்சை ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக, ஒரு துணை தலைமை நிர்வாக அலுவலரும், ஒரு பிரிவு அலுவலரும் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு, வேறு துறைகளுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

கேரளத்தின் கூடுதல் தலைமைச் செயல் அலுவலர் பி.பி. நூஹ் நடத்திய விசாரணையைத் தொடர்ந்து இந்த ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே, கடிதங்களை அனுப்பியதாகக் கூறப்படுபவரான ஜெய்சல் பி அஜீஸ் என்ற அலுவலக உதவியாளர் இடைநீக்கம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## இணையவழி வர்த்தகப் பரிமாற்றங்களுக்கான சுங்க வரி விலக்கு நீட்டிப்பு: இந்தியா எதிர்ப்பு

புதுடெல்லி, மார்ச் 30:




கேமரூன் நாட்டில் நடைபெற்று வரும் உலக வர்த்தக அமைப்பின் 14-ஆவது அமைச்சர்கள் மாநாட்டில், இணையவழி வர்த்தகப் பரிமாற்றங்களுக்கான சுங்க வரி விலக்கை நீட்டிப்பது தொடர்பாக இந்தியா மற்றும் வளர்ந்த நாடுகளுக்கு இடையே கடும் கருத்து வேறுபாடு நிலவி வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மின்னணு முறையில் பரிமாறப்படும் மென்பொருள்கள், மின்னணு புத்தகங்கள் மற்றும் தரவுகள் மீதான சுங்க வரி விலக்கை நிரந்தரமாக்க வேண்டும் என்று அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

இருப்பினும், இந்த வரி விலக்கு நீட்டிப்பால் தங்களுக்குப் பெரும் வருவாய் இழப்பு ஏற்படுவதாகவும், உள்நாட்டுக் கொள்கைகளை வகுப்பதில் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதாகவும் கூறி இந்தியா உள்ளிட்ட வளரும் நாடுகள் இதற்கு முட்டுக்கட்டை போட்டுள்ளன. இதன் காரணமாக, 2 முதல் 4 ஆண்டுகள் வரை தற்காலிகமாக இந்த வரி விலக்கை நீட்டிக்கும் வகையில் ஒரு சமரச முடிவு எட்டப்பட வாய்ப்புள்ளதாகத் தெரிகிறது.

## எல்பிஜி தட்டுப்பாட்டால் பிஎன்ஜிக்கு மாறும் மக்கள்

புதுடெல்லி, மார்ச் 30:

அமெரிக்கா, ஈரான் போர் காரணமாக நாடு முழுவதும் வணிக, வீட்டு உபயோக சமையல் காஸ் சிலிண்டர்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண குழாய் வழி காஸுக்கு (பிஎன்ஜி) மாற வேண்டும் என்று மத்திய அரசு அண்மையில் அழைப்பு விடுத்தது.

தமிழகம், மகாராஷ்டிரா, டெல்லி, உத்தர பிரதேசம், ஹரியானா உள்ளிட்ட மாநிலங்களின் பல்வேறு நகரங்களில் பிஎன்ஜி காஸுக்கான குழாய்கள் பதிக்கப்பட்டு உள்ளன. எல்பிஜி சமையல் காஸ் சிலிண்டர்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் இந்த நகரங்களில் குழாய் வழி பிஎன்ஜி காஸுக்கு பொதுமக்கள் அதிக எண்ணிக்கையில் மாறி வருகின்றனர். கச்சா எண்ணெயை சுத்திகரிக்கும்போது எல்பிஜி சமையல் காஸ் கிடைக்கிறது. இது புரோப்பேன், பியூட்டேன் வாயுக்களின் கலவை ஆகும். இதற்கு மணம் கிடையாது. ஆனால் எல்பிஜி கசிவை கண்டறிய ஈத்தைல் மெர்கேப்டன் என்ற வேதிப்பொருள் சேர்க்கப்படுகிறது. இதன்மூலமே எல்பிஜி காஸ் கசிவை கண்டறிய முடிகிறது.

பிஎன்ஜி காஸ் என்பது இயற்கை எரிவாயு ஆகும். பெரும்பாலும் மீத்தேன் எரிவாயு ஆகும். நிலத்தடியில் உள்ள இயற்கை எரிவாயு கிணறுகளில் இருந்து மீத்தேன் பிரித்தெடுக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு குழாய் மூலம் வீடுகள், ஆலைகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது சுமார் 50% பிஎன்ஜி காஸ் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுகிறது. இதுகுறித்து பொதுத்துறை எண்ணெய் நிறுவனமான இந்தியன் ஆயில் நேற்று வெளியிட்ட அறிவிப்பில், “HTTPS://MYPNGD.IN/ என்ற இணையதளத்தில் நுழைந்து உங்களது மொபைல் போன் எண் அல்லது எல்பிஜி இணைப்பு எண்ணை பதிவு செய்ய வேண்டும். பின்னர் சரண்டர் செய்வதற்கான விருப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும். உங்கள் வீட்டில் இருந்தபடியே எளிதாக எல்பிஜி இணைப்பை துண்டிக்கலாம். இதர நடவடிக்கைகள் அனைத்தையும் சம்பந்தப்பட்ட ஏஜென்ஸிகளே மேற்கொள்ளும்” என கூறப்பட்டு உள்ளது. முன்னதாக, பாரதிய ராஷ்டிரிய சமிதி கட்சிக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் குற்றம்சாட்டப்பட்டு கவிதா அக்கட்சியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## 10 ஆண்டுகளில் 10,000 மாவோயிஸ்டுகள் சரண்!



புதுடெல்லி, மார்ச் 30:

கடந்த பத்தாண்டுகளில் 10,000 மாவோயிஸ்டுகள் ஆயுதங்களைக் கைவிட்டு சரணடைந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாதுகாப்பு அழுத்தம் மற்றும் மறுவாழ்வு முயற்சிகள் நாட்டின் மிக நீண்டகால போராட்டங்களுள் ஒன்றான நக்ஸல் வாதத்துக்கு ஒரு மரண அடியைக் கொடுத்துள்ளது.

கடந்த பத்தாண்டுகளில் 10,000 க்கும் மேற்பட்ட மாவோயிஸ்டுகள் ஆயுதங்களைக் கைவிட்டதோடு அந்த அமைப்பின் உயர்நிலைத் தலைவர்களும் ஒழிக்கப்பட்டுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

2014 முதல் 2026 ஆம் ஆண்டின் தொடக்கம் வரையிலான இடதுசாரி பயங்கரவாத அமைப்புகளின் சரணடைவுகள் குறித்த அதிகாரப்பூர்வ தரவுகளின்படி, 2025 ஆம் ஆண்டில் 2300 மாவோயிஸ்டுகள் ஆயுதங்களைக் கைவிட்டனர்.

மேலும் 2026 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் 630 க்கும் மேற்பட்ட போராளிகள் ஆயுதங்களைக் கைவிட்டு பொது வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்தனர்.

நாட்டிலிருந்து நக்ஸல்வாதத்தை தலழிப்பதற்கான காலக்கெடுவாக மார்ச் 31 ஐ மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## அதானி நிறுவனம் தயாரித்த 2,000 துப்பாக்கிகள் இந்திய ராணுவத்திற்கு வழங்கப்பட்டன!

புதுடெல்லி, மார்ச் 30:



அதானி டிஃபென்ஸ் (பாதுகாப்பு) நிறுவனம் தயாரித்த 2,000 இலகுரக துப்பாக்கிகள் இந்திய ராணுவத்திடம் வழங்கப்பட்டன.

மேக் இன் இந்தியா திட்டத்தின் கீழ் அதானி டிஃபென்ஸ் மற்றும் ஏரோஸ்பேஸ் (பாதுகாப்பு மற்றும் விண்வெளி) நிறுவனம் தயாரித்த ‘பிரஹார்’ எனப்படும் 7.62 மிமி அளவு கொண்ட 2,000 இலகுரக இயந்திரத் துப்பாக்கிகளின் முதல் தொகுதி இந்திய ராணுவத்திடம் இன்று வழங்கப்பட்டன.

மத்தியப் பிரதேசத்தின் குவாலியர் நகரில் அமைந்துள்ள இந்நிறுவன வளாகத்தில் இலகுரக இயந்திரத் துப்பாக்கிகளை ராணுவத்திடம் வழங்கும் விழா இன்று நடைபெற்றது.

இதில், பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் கொள்முதல் துறை தலைமை இயக்குநர் அன்பரசு, அதானி டிஃபென்ஸ் மற்றும் ஏரோஸ்பேஸ் (பாதுகாப்பு மற்றும் விண்வெளி) நிறுவன தலைமை நிர்வாக அதிகாரி ஆஷிஷ் ராஜ்வன்ஷி மற்றும் சில உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இராணுவத்திற்கு வழங்கவிருந்த துப்பாக்கிகள் அடங்கிய டிரக் வாகனங்களை அன்பரசு கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

இதுபற்றிப் பேசிய ராஜவன்ஷி, “ஒப்பந்தம் தொடங்கிய நாள் முதல் இந்தப் பயணத்திற்கு இன்று வரை 6 ஆண்டுகள் ஆகியுள்ளன. எங்களுக்கு 7 ஆண்டுகள் இந்தப் பணிக்காக வழங்கப்பட்டது. ஆனால், திட்டமிட்டதற்கு 11 மாதங்கள் முன்னதாகவே துப்பாக்கிகளைத் தயாரித்து வழங்கியுள்ளோம்.

அடுத்த 3 ஆண்டுகளில் மொத்த ஆர்டர்களையும் தயாரித்து வழங்குவோம் என்று நான் உறுதியளிக்கிறேன்” என்று கூறினார்.

மொத்தமாக 40,000 இலகுரக இயந்திரத் துப்பாக்கிகள் தயாரிக்க ஆர்டர் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. திட்டமிடப்பட்ட காலக்கெடுவிற்கு முன்பாக துப்பாக்கிகளை விநியோகித்து, பல மாதங்களை மிச்சப்படுத்தியதற்காக அதானி நிறுவனத்தைப் பாராட்டிய அன்பரசு, ”ஒப்பந்தங்களைச் செயல்வடிவமாக மாற்றுவதில், காலத்திற்கு எதிராக ’வேகமாகச் செயல்பட்டு இலக்கை எட்டும்’ ஆற்றல் உங்களுக்கு இருப்பதை இது உணர்த்துகிறது. பாதுகாப்புத் துறை சார்ந்த தொழில் கூட்டமைப்புடன் அரசு என்றும் துணை நிற்கும்” என்றும் அவர் தெரிவித்தார்.

## கோயிலில் காலணி அணிந்து புகைப்படம் எடுத்ததால் மோதல்: 7 பேர் கைது

பெங்களூரு, மார்ச் 30:

கர்நாடகாவில் கோயிலில் புகைப்படக் கலைஞர்கள் காலணி அணிந்து திருமணத்துக்காகப் புகைப்படம் எடுத்ததால் 7 பேர் கொண்ட கும்பலால் தாக்கப்பட்டனர். இந்த சம்பவம் குறித்து வழக்குப் பதிவு செய்த போலீஸார் 7 பேரையும் கைது செய்தனர்.

கர்நாடக மாநிலம் ஹாசன் மாவட்டத்தில் சக்லேஷ்பூரில் பெட்டத பைரேஸ்வரா கோயில் உள்ளது. அங்கு நேற்று புகைப்படக் கலைஞர்கள் நவி (27), நந்தன் (25) ஆகியோர் புதுமணத் தம்பதியினரைப் புகைப்படம் எடுப்பதற்காக வந்தனர். அப்போது நவியும், நந்தனும் காலணி அணிந்து புகைப்படம் எடுத்ததால் பக்தர்கள் கோபமடைந்தனர்.

இருவரையும் கோயிலுக்கு வெளியே காலணிகளைக் கழற்றி விட்டு வருமாறு கூறியுள்ளனர். இதில் இரு தரப்புக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதாக தெரிகிறது. இதனால் கோபமடைந்த உள்ளூர் இளைஞர்கள் 10-க்கும் மேற்பட்டோர் நவி, நந்தனை கடுமையாக தாக்கினர். மேலும் அவர்களின் கேமராக்களைப் பறித்து கீழே போட்டு உடைத்தனர். இதனால் சிறிது நேரம் சலசலப்பு ஏற்பட்டது.

இது குறித்து தகவலறிந்த போலீஸார் காயமடைந்த புகைப்படக் கலைஞர்களை மீட்டு, மருத்துவமனையில் அனுமதித்தனர். இருவரும் அளித்த புகாரின் பேரில் 7 பேரை கைது செய்தனர்.

## மேற்கு வங்கம்: 294 தொகுதிகளிலும் காங்கிரஸ் தனித்து போட்டி!

புதுடெல்லி, மார்ச் 30:

மேற்கு வங்கத்தில் பேரவைத் தேர்தலில் 294 தொகுதிகளிலும் தனித்து போட்டியிடுவதாக காங்கிரஸ் அறிவித்துள்ளது.

மேற்கு வங்கத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்ரல் 23, 29 ஆகிய தேதிகளில் இரு கட்டங்களாக நடத்தப்படவுள்ளது. மேலும், தேர்தல் பணிகளில் கட்சிகளும் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

இந்த நிலையில், மாநிலத்தின் 294 தொகுதிகளில் காங்கிரஸ் தனித்து போட்டியிடவிருப்பதாக கட்சித் தலைமை அறிவித்துள்ளது.

தில்லியில் மேற்கு வங்கத்தின் தேர்தல் தொடர்பாக நடைபெற்ற காங்கிரஸின் தேர்தல் குழுக் கூட்டத்தில் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தி, பொதுச் செயலாளர் கே.சி. வேணுகோபால் மற்றும் மேற்கு வங்க காங்கிரஸின் முக்கிய தலைவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தின்போது, மேற்கு வங்கத்தில் திரிணமூல் காங்கிரஸ் மற்றும் பாஜகவுக்கு எதிராக 294 தொகுதிகளிலும் தனித்து போட்டியிட முடிவு செய்யப்பட்டது.

இதுகுறித்து, மேற்கு வங்கத்துக்கான காங்கிரஸ் கமிட்டியின் பொறுப்பாளர் குலாம் அகமது மிர் அறிவிக்கையில், ஒவ்வொரு தொகுதியிலும் வேட்பாளர்களை நிறுத்த கட்சி முடிவு செய்துள்ளது. ஒரு முழுமையான போட்டியை எதிர்கொள்ளவுள்ளோம்.

மேலும், பவானிபூரில் நிச்சயமாக வலிமை வாய்ந்தவர்தான் போடியிடுவார். எந்த இடத்தையும் காலியாக விடுவதாய் இல்லை என்று தெரிவித்தார்.

மேற்கு வங்க முதல்வர் மமதா பானர்ஜி, திரிணமூல் காங்கிரஸ் சார்பாக பவானிபூரில் போட்டியிடுவது குறிப்பிடத்தக்கது.

மேற்கு வங்கத்தில் ஆளும் திரிணமூல் காங்கிரஸுக்கும் பாஜகவுக்கும்தான் பலத்த போட்டி நிலவுவதாகவும், காங்கிரஸ் சமீபமாக பின்னடைவைச் சந்தித்து வருவதாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில், காங்கிரஸ் மீண்டும் தன்னை நிலைநிறுத்தும் நோக்கில் நடவடிக்கை எடுத்து வருகிறது.

## இந்தியாவில் மகப்பேறு இறப்பு விகிதம் 80 சதவீதம் குறைவு...

புதுடெல்லி, மார்ச் 30:

இந்தியாவில் கடந்த 33 ஆண்டுகளில் மகப்பேறு இறப்பு விகிதம் (எம்எம்ஆர்) 80 சதவீதம் வரை குறைந்துவிட்டதாக லான்செட் மகப்பேறியல், மகளிர் நோய்களுக்கான சிகிச்சை மற்றும் சுகாதார ஆய்விதழ் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

கர்ப்பம், மகப்பேறு அல்லது பிரசவத்துக்குப் பிந்தைய 42 நாள்களுக்குள் தாய் உயிரிழப்பது மகப்பேறு இறப்பு எனப்படுகிறது. இது ஒரு லட்சம் குழந்தை பிறப்புகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுகிறது. இதுதொடர்பாக லான்செட் இதழில் உலகளவில் நோய்களால் ஏற்படும் சுமை -2023 என்ற தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு தொடர்பாக வெளியான அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

இந்தியாவில் 1990-இல் 1 லட்சம் குழந்தை பிறப்புகளுக்கு 508 தாய்மார்கள் இறப்பு என்றிருந்த விகிதம், 2023-இல் 116-ஆக குறைந்துள்ளது. 2023-ஆம் ஆண்டில் 24,700 தாய்மார்கள் உயிரிழந்துள்ளனர்.

இதே காலகட்டத்தில் பாகிஸ்தானில் 10,300 தாய்மார்களும் எத்தியோப்பியாவில் 11,900 மற்றும் நைஜீரியாவில் 32,900 தாய்மார்களும் உயிரிழந்துள்ளனர். 2023-இல் உலகம் முழுவதும் 2.40 லட்சம் தாய்மார்கள் உயிரிழந்துள்ளனர். இதனால் உலக அளவிலான மகப்பேறு இறப்பு விகிதம் 190.5-ஆக உள்ளது. இது 1990-இல் 321-ஆக இருந்த நிலையில் வெகுவாக குறைந்துள்ளது. 104 நாடுகள் இலக்கை எட்டவில்லை: 2030-க்குள் மகப்பேறு இறப்பு விகிதத்தை 70-ஆக குறைக்க உலக நாடுகளுக்கு நீடித்த வளர்ச்சி இலக்குகளின்கீழ் (எஸ்டிஜி) அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் 204 நாடுகளில் 104 நாடுகள் இந்த இலக்கை தற்போது வரை அடையவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவுக்கு உலக அங்கீகாரம்: அண்மையில் வெளியிடப்பட்ட 2021-2023 காலகட்டத்துக்கான மாதிரி பதிவு முறையின்படி இந்தியாவில் மகப்பேறு இறப்பு விகிதம் 88-ஆக உள்ளது.

இதுகுறித்து மத்திய சுகாதாரத் துறை வட்டாரங்கள் கூறுகையில், ‘இந்தியாவில் 1990-இல் இருந்து மகப்பேறு இறப்பு விகிதம் 86 சதவீதம் குறைந்துள்ளதாகவும் உலக அளவில் இது 48 சதவீதமாகவும் உள்ளதாகவும் அண்மையில் ஐ.நா.வின் மகப்பேறு இறப்பு மதிப்பீட்டுக் குழு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. இந்தியாவின் சுகாதார முன்னெடுப்புகளுக்கு உலக அளவில் அங்கீகாரம் கிடைத்துள்ளதற்கு இதுவே சான்று. இதுதொடர்பாக 2030-க்குள் நிர்ணயிக்கப்பட்டுள்ள நீடித்த வளர்ச்சி இலக்குகளை இந்தியா அடைந்துவிடும்’ எனத் தெரிவித்தன.

## மே.வங்க தேர்தலில் மம்தாவுக்கு இணையாக முக்கியத்துவம் பெறும் மருமகன் அபிஷேக்

புதுடெல்லி, மார்ச் 30:

மேற்கு வங்கத்தை ஆளும் திரிணமூல் காங்கிரஸின் (டிஎம்சி) இளைஞர் பிரிவு தலைவராக இருப்பவர் அபிஷேக் பானர்ஜி. மக்களவை எம்.பி.யான இவரை முதல்வர் மம்தா தனது வாரிசாக முன்னிறுத்தி வருகிறார். இதனால் கட்சியில் மம்தாவுக்கு அடுத்த நிலை தலைவராக அபிஷேக் முன்னிறுத்தப்படுகிறார்.

இந்நிலையில் 2026 தேர்தல் பிரச்சாரத்தில் முதல்வர் மம்தாவுக்கு இணையான தலைவராக அபிஷேக் உருவெடுத்துள்ளார். இருவரின் ஒருங்கிணைந்த தலைமை, மேற்கு வங்க அரசியலில் ஒரு தனித்துவமான அரசியல் நிலையை உருவாக்கியுள்ளது.

முதல்வர் மம்தாவின் நம்பிக்கைக்கு உரிய தளபதியாக அபிஷேக் மாறி வருகிறார். இது, மாநில தேர்தல் அரசியலில் மம்தாவின் மருமகன் அபிஷேக்கின் ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகப் பார்க்கப்படுகிறது.

சுமார் 34 ஆண்டுகள் தொடர்ந்து ஆட்சி செய்த இடதுசாரி கட்சிகளுக்கு பின் டிஎம்சி ஆட்சிக்கு வந்தது. அப்போது டிஎம்சியில் உறுப்பினரான அபிஷேக், கடந்த 2021 சட்டப்பேரவை மற்றும் மக்களவை தேர்தல்களின் போதும் தீவிரப் பங்கு வகித்திருந்தார். இருப்பினும், தற்போதைய பிரச்சாரத்தில் மம்தா - அபிஷேக் இடையே காணப்படும் ஒருங்கிணைப்பின் அளவு இதுவரை இல்லாத வகையில் உள்ளது.

கடந்த 2014 மக்களவைத் தேர்தலில் கொல்கத்தாவின் டைமண்ட் ஹார்பர் தொகுதியில் போட்டியிட்டு எம்.பி.யானார் அபிஷேக். அப்போது முதல் அதே தொகுதியில் எம்.பி.யாக வென்று வருகிறார். இம்மாநிலத்தில் பாஜக முக்கிய எதிர்க்கட்சியாக படிப்படியாக உருவெடுத்துள்ளது.

இந்த தேர்தலில் பாஜக தனது அரசியல் ஆக்ரோஷத்தை கடுமையாக வெளிப்படுத்தி வருகிறது. இந்த வகை அரசியல் கடந்த நான்கு தசாப்தங்களாக மேற்கு வங்கத்தில் மிகவும் அரிதாகவே காணப்பட்டது. எனவே, தற்போதைய சட்டப்பேரவை தேர்தல், டிஎம்சி மற்றும் பாஜக இடையே கடுமையானப் போட்டியை ஏற்படுத்தி உள்ளது.

## “லாக்-டவுனுக்கு வாய்ப்பு இல்லை” - அமித் ஷா பேச்சு

குவஹாட்டி, மார்ச் 30:

லாக்-டவுனுக்கு வாய்ப்பு இல்லை என மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார். அசாம் மாநில சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு பிரச்சாரத்தில் ஈடுபட்ட அவர் தனியார் செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

“லாக்-டவுனுக்கு வாய்ப்பு இல்லை. தேசம் முழுவதும் நிலைமை சீராக உள்ளது. மற்ற நாடுகளில் இப்படி இல்லை. சர்வதேச அளவில் எரிபொருள் சார்ந்த நெருக்கடி நிலை எழுந்துள்ளது. பிலிப்பைன்ஸில் தேசிய அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் எரிபொருள் விற்பனையில் 8 லிட்டர் என்ற வரம்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்தில் வீட்டில் இருந்து பணியாற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. வியட்நாமில் விமான இயக்க எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது, பாகிஸ்தானில் வாரத்துக்கு நான்கு நாட்கள் மட்டுமே பணி என அறிவிக்கப்பட்டுள்ளது. உலக அளவில் இப்படி இருக்கும் சூழலில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு பல்வேறு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. நமது பிரச்சினைகளை நாம் தான் எதிர்கொள்ள வேண்டும். அந்த வகையில் பெட்ரோல், டீசல் மாதிரியான எரிபொருள் மற்றும் எல்பிஜி எரிவாயு தட்டுப்பாடு நாட்டில் இல்லை. வழக்கம் போலவே சந்தையில் அதன் விநியோகம் உள்ளது. தேசம் முழுவதும் அதை உறுதி செய்து வருகிறோம். அதற்கான பணியை தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். உலக நாடுகளில் பெட்ரோல், டீசல் உள்ளிட்ட எரிபொருள்களின் விலை அதிகரித்து வருகிறது. இந்தியாவில் மட்டுமே பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்படவில்லை. கலால் வரியை குறைத்து சுமையை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. உலகில் வேறு எந்த நாடும் இதை செய்யவில்லை” என அமித் ஷா தெரிவித்துள்ளார்.




# உல்லாச வாழ்க்கைக்கு பணம் தராததால் சிறுவனை கொலை செய்த மாமன்



**திருமலை, மார்ச்.30:** உல்லாச வாழ்க்கைக்கு பணம் தராததால், சிறுவனை கொலை செய்த மாமனை கைது செய்தபோது, போலீசாரை தாக்கி தப்பியோடிய கொலையாளியை துப்பாக்கியால் சுட்டு பிடித்த சம்பவம் அனந்தபுரம் மாவட்டத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆந்திர மாநிலம், அனந்தபுரம் மாவட்டம், யாதிகி மண்டலத்தின் கொனுப்பலபாடு கிராமத்தை சேர்ந்தவர் போய கோவிந்து. இவரது மனைவி லட்சுமி கண்டம்மா. இவர்களுக்கு லலிதா உட்பட 3 மகள்களும், ஹேமசந்திரா(7) என்ற மகனும் உள்ளனர். இவர் யாதிகியில் உள்ள தனியார் பள்ளியில் யு.கே.ஜி படித்து வந்தார்.

இதையடுத்து லலிதா, நிட்டூர் கிராமத்தை சேர்ந்த சர்வேஷ் என்பவரை காதலித்ததால், போய கோவிந்து, லட்சுமி கண்டம்மா ஆகியோர் சம்மதத்துடன் திருமணம் செய்து கொண்டனர். உல்லாச வாழ்க்கைக்கு ஆசைப்பட்ட சர்வேஷ், லலிதா மற்றும் லட்சுமி கண்டம்மா ஆகியோரிடம் பணம் கேட்டு அடிக்கடி தொந்தரவு செய்து வந்துள்ளார். அதற்கு அவர்கள் ஒத்துழைக்காமல், சர்வேஷை திட்டியதாக கூறப்படுகிறது. இதனால், சர்வேஷ் ஆத்திரமடைந்து, ஹேமசந்திராவை கொலை செய்ய திட்டமிட்டான்.

கடந்த 25ம் தேதி மதியம், பள்ளிக்கு சென்ற ஹேமசந்திராவை யாருக்கும் தெரியாமல் தனது பைக்கில், கடத்தி சென்று சித்தனையைபள்ளி-குண்டங்கோட்டா மலையில் உள்ள ஒரு குன்றுக்கு அழைத்து சென்று, தனது மனைவி மற்றும் மாமியாரின் மீது உள்ள ஆத்திரத்தில், ஹேமசந்திராவை, கொடூரமாக கல்லால் தாக்கி கொலை செய்து, அங்குள்ள பாறைகளுக்கு இடையே சடலத்தை மறைத்து வைத்தான்.

இதையடுத்து பள்ளிக்கு சென்ற ஹேமசந்திரா, வீட்டிற்கு வராததால், அவனது பெற்றோர் பல இடங்களில் தேடினர். அப்போது சர்வேஷும் ஒன்றும் தெரியாததுபோல் நடந்து கொண்டு, ஹேமசந்திராவை, தேடுவதுபோல், மாமியார் மற்றும் மாமனாருடன் சேர்ந்து தேடியுள்ளார்.

ஆனால், சிறுவன் கிடைக்காததால், யாதிகி காவல் நிலையத்தில் போய கோவிந்து புகார் அளித்தார். அதன்பேரில், போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வந்தனர்.

மேலும், அப்பகுதியில் உள்ள சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்தனர். அதில் ஹேமசந்திராவை, முகமூடி அணிந்த வாலிபர் பைக்கில் கொண்டு சென்றது தெரியவந்தது. அதன்பிறகு சர்வேஷ் மீது சந்தேகமடைந்த போலீசார், அவரிடம் விசாரணை நடத்தினர்.

விசாரணையில், தான் பணம் கேட்டு கொடுக்காததால், ஹேமசந்திராவை கொலை செய்து பாறைகளுக்கு இடையில் சடலத்தை மறைத்திருப்பதாக கூறினார். இதையடுத்து போலீசார் சர்வேஷை கைது செய்து, சடலத்தை மீட்க கொலை செய்யப்பட்ட மலைக்கு அழைத்து சென்றனர்.

அப்போது சர்வேஷ், சடலத்தை காண்பித்துவிட்டு, அங்கிருந்த பீர் பாட்டிலை எடுத்து, இன்ஸ்பெக்டர் ராமசுப்பையா மற்றும் மற்றொரு போலீசாரை சர்வேஷ் பாட்டிலால் தாக்கிவிட்டு தப்பி ஓடினான்.

இதில் போலீசார் காயமடைந்தனர். இதைப்பார்த்து அதிர்ச்சியடைந்த ராமசுப்பையா தான் வைத்திருந்த கை துப்பாக்கியால், சர்வேஷின் காலில் சுட்டார். இதில் காயமடைந்த சர்வேஷை அங்கிருந்த போலீசார் பிடித்தனர்.

இதையடுத்து காயமடைந்த 3 பேரையும், சிகிச்சைக்காக போலீசார் தாடிபத்ரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று, அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதையடுத்து போலீசார் ஹேமசந்திராவின் சடலத்தை மீட்டு, பிரேத பரிசோதனைக்கு அதே மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து, விசாரணை நடத்தி வருகின்றனர். பணத்திற்காக தனது மைத்துனரான சிறுவனை, கொலை செய்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# தீபாவளி சீட்டு மோசடி: ஒருவர் கைது; 2 பெண்களுக்கு வலை

**பெரம்பூர், மார்ச்.30:** தீபாவளி சீட்டு மோசடியில் ஒருவரை கைது செய்துள்ள நிலையில், 2 பெண்களை தேடி வருகின்றனர். சென்னை வியாசர்பாடி மல்லிப்பூ காலனி பகுதியை சேர்ந்தவர் பேபி (48). இவர் ரயில்வேயில் ஒப்பந்த தொழிலாளர். இவருக்கு நன்கு அறிமுகமான செல்வி, ஷாலினி, முருகன் என்கின்ற சந்திரகுமார்ஆகியோரிடம் பேபி கடந்த 2023ம் ஆண்டு நவம்பர் மாதம் தீபாவளி சீட்டு கட்டி வந்துள்ளார். மேலும் இவர் மூலம் 31 பேர் சீட்டில் சேர்ந்துள்ளனர்.LONG DISTANCE BUS & RAIL

இந்த நிலையில், முதிர்வு காலம் முடிந்தபிறகும் 31 பேருக்கும் 3 லட்சத்து 72 ஆயிரம், இரண்டு கிராம் தங்க நாணயம் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் கொடுக்காமல் இழுத்தடித்துள்ளார். இதுசம்பந்தமாக பேபி கொடுத்த புகாரின்படி, வியாசர்பாடி குற்றப்பிரிவு போலீசார் வழக்குபதிவு செய்து விசாரித்து திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி தாலுகா அத்திப்பட்டு பகுதியை சேர்ந்த முருகன் என்கின்ற சந்திரகுமார் (43) நேற்று கைது செய்தனர். பின்னர் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். இந்த வழக்கில் 2 பெண்களை தேடி வருகின்றனர்.

# கறிக்கோழி சரக்கு வேனில் நூதன முறையில் குட்கா கடத்தி வந்த 2 பேர் கைது

**பல்லடம், மார்ச்.30:** கர்நாடகா மாநிலம் மைசூரில் இருந்து கறிக்கோழி சரக்கு வேனில் குட்கா கடத்தி வந்த 2 பேரை பல்லடம் போலீசார் நேற்று கைது செய்தனர்.பல்லடம் பகுதியில் நேற்று போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டனர்.



அப்போது சந்தேகம் படும் வகையில் வந்த கூண்டு வைத்த சரக்கு வேனை தடுத்து நிறுத்தி சோதனை செய்தனர். அப்போது டயர் மற்றும் வேன் முன்புற கதவுகளில் மறைத்து வைத்து நூதன முறையில் குட்கா கடத்தி வந்தது தெரியவந்தது.

விசாரணையில் பல்லடம் அம்மாபாளையம் சுரேஷ் (39), கணபதிபாளையம் பிரகாஷ் (36) என்பதும், இவர்கள் இருவரும் பல்லடத்தில் இருந்து கறிக்கோழிகளை ஏற்றிகொண்டு கர்நாடகா மாநிலம் மைசூரில் டெலிவரி செய்து விட்டு, அங்கு குறைந்த விலைக்கு குட்கா வாங்கி கடத்தி வந்தது தெரியவந்தது.இதனை தொடர்ந்து போலீசார் இருவரையும் கைது செய்து 21 கிலோ குட்காவை பறிமுதல் செய்து விசாரணை மேற்கொண்டனர்.

# முதன்முறையாக 'க்யூ-ஆர்' கோடு முறையில் தமிழகம்-புதுவை பார் கவுன்சிலுக்கு இன்று தேர்தல்

**சென்னை, மார்ச்.30:** முதன் முறையாக 'க்யூ-ஆர்' கோடு முறையில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சிலுக்கான தேர்தல் நாளை நடைபெற உள்ளது.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சிலுக்கு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடத்தப்பட வேண்டிய நிலையில், கடந்த 2018-ம் ஆண்டுக்குப் பிறகு உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி தற்போது நடைபெறவுள்ளது.

மொத்தம் உள்ள 25 உறுப்பினர்களில் 2 பெண் உறுப்பினர்கள் நியமன முறையில் உச்ச நீதிமன்றஉத்தரவுப்படி அகில இந்திய பார் கவுன்சிலால் நியமிக்கப்படுவர். மீதமுள்ள 23 உறுப்பினர்களை தேர்வு செய்வதற்கான தேர்தல் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் நாளை நடைபெறவுள்ளது.

இந்த 23 பேரில் குறைந்தபட்சம் 5 பெண் உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும் என்ற நிலையில், மொத்தம் 143 பேர் போட்டியிடுகின்றனர். தமிழகம் மற்றும் புதுச்சேரியில் 1 லட்சத்து 540 வழக்கறிஞர்கள் வாக்களிக்கவுள்ளனர். முதன்முறையாக க்யூ-ஆர் கோடு முறையில் இந்த தேர்தல் நடத்தப்படவுள்ளது.

ஆன்லைன் மூலமாக க்யூ-ஆர் கோடுக்கான படிவத்தை பதிவிறக்கம் செய்யும் போது, அதில் சம்பந்தப்பட்ட வழக்கறிஞரின் பெயர், பதிவு எண், வாக்குப் பட்டியல் வரிசை எண், பதிவு செய்துள்ள வழக்கறிஞர் சங்கம், வாக்களிக்க வேண்டிய வாக்குச்சாவடி விவரங்கள் இடம் பெற்றிருக்கும்.

ஒரு வழக்கறிஞர் முன்னுரிமை அடிப்படையில் 1 முதல் 23 வேட்பாளர்களை, அவர்களின் பெயர்களுக்கு எதிராக 1, 2, 3 என நம்பரை எழுதி தங்களது வாக்கை பதிவு செய்யலாம். இதுதொடர்பாக தேர்தல் தலைமை அதிகாரியும், ஓய்வுபெற்ற நீதிபதியுமான கே.என்.பாஷா மற்றும் பார் கவுன்சில் தேர்தல் உயர் மட்டக்குழு உறுப்பினரும், மூத்த வழக்கறிஞருமான இ.ஓம் பிரகாஷ் செய்தியாளர்களிடம் கூறியதாவது:



இந்த பார் கவுன்சில் தேர்தல் பணிகள் உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி ஓய்வுபெற்ற இமாச்சலப்பிரதேச உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ராஜீவ் ஷக்தர்தலைமையிலான உயர் மட்டக் குழுவின் மேற்பார்வையில் நடைபெறுகிறது. தேர்தலை அமைதியான முறையில் நடத்திட தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப் பட்டுள்ளன.

தமிழகத்தில் 166 வாக்குச் சாவடிகளும், புதுச்சேரியில் 2 வாக்குச்சாவடிகளும் அமைக்கப்பட்டுள்ளன முதன்முறையாக உச்ச நீதிமன்றத்தில் உள்ள தமிழக வழக்கறிஞர்களும் வாக்களிக்கும் வகையில் வாக்குப்பெட்டி டெல்லிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதேபோல முதன்முறையாக க்யூ-ஆர் கோடு முறையில் வாக்காளர்களின் விவரங்கள் சரிபார்க்கப்பட்டு, தேர்தல் நடத்தப்படுவதால் வழக்கறிஞர்களின் விவரங்கள் நொடிப்பொழுதில் சரிபார்க்கப்பட்டு வாக்குப்பதிவு எளிமையான முறையில் விரைவாக நடைபெற அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

ஒரு வழக்கறிஞருக்கு எந்த இடத்தில் வாக்குச்சாவடி ஒதுக்கப்பட்டுள்ளதோ அங்கு மட்டுமே அவரால் வாக்களிக்க முடியும். சென்னையில் அதிகபட்சமாக 30 ஆயிரம் வழக்கறிஞர்கள் வாக்காளர் பட்டியலில் உள்ளனர். இதில் உயர் நீதிமன்றத்தில் மட்டும் 28 ஆயிரம் வழக்கறிஞர்கள் உள்ளனர். எனவே சென்னை உயர் நீதிமன்றத்தில் 56 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த தேர்தலை முறையாகக் கண்காணிக்கும் வகையில் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற மற்றும் மாவட்ட நீதிபதிகள், மூத்த வழக்கறிஞர்கள், உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதன்படி தேர்தல் பார்வையாளர்களாக, ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதிகளான கோகுல்தாஸ் சென்னைக்கும், ராஜேஸ்வரன் கோவைக்கும், பி.என் .பிரகாஷ் திருவள்ளூருக்கும், பஷீர்அகமது நாமக்கல்லுக்கும், சொக்கலிங்கம் அரியலூர் மற்றும் பெரம்பலூருக்கும், பாஸ்கரன் திருச்சி மற்றும் புதுக்கோட்டைக்கும், கோவிந்தராஜன் மதுரைக்கும், ஆர்.என்.மஞ்சுளா வேலூருக்கும், நக்கீரன் கன்னியாகுமரிக்கும், பெரிய கருப்பையா செங்கல்பட்டுக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வாக்கு எண்ணிக்கை: ஏப் .3-ல் தொடங்கி அதிகபட்சமாக ஒன்றரை மாதங்களில் முடிவுகள் அறிவிக்கப்படும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# தமிழகத்தில் சில இடங்களில் 5 டிகிரி வரை வெப்பநிலை உயர வாய்ப்பு

**சென்னை, மார்ச்.30:** தமிழகத்தில் ஓரிரு இடங்களில் நாளை (மார்ச் 29) அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தைவிட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயர வாய்ப்பு உள்ளது.

இது தொடர்பாகசென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென் இந்தியப் பகுதிகளின்மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, நாளை (மார்ச் 29) மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். மார்ச் 30, 31, ஏப்.1 ஆகிய தேதிகளில் தென் தமிழக கடலோர மாவட்டங்கள், மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

ஏப்.2-ல் மேற்கண்ட பகுதிகளுடன் டெல்டா மாவட்டங்களிலும் லேசான மழை பெய்யக்கூடும். 3-ம் தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் நாளை (மார்ச் 29) அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தைவிட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயரக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்பநிலை 79 டிகிரி முதல் 97 டிகிரி ஃபாரன்ஹீட் வரை இருக்கக் கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு செல்லப்பட்ட 500 குக்கர்கள் பறிமுதல்



**ஸ்ரீவில்லிபுத்தூர், மார்ச்.30:** ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே தேர்தல் பறக்கும் படையினரின் வாகன தணிக்கையில், சரக்கு வாகனத்தில் உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு வரப்பட்ட ரூ.9 லட்சம் மதிப்பிலான 500 குக்கர் பெட்டிகளை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

ஸ்ரீவில்லிபுத்தூர் - சிவகாசி சாலையில் மல்லி பஜார் பகுதியில் மண்டல துணை வட்டாட்சியர் பாண்டீஸ்வரி தலைமையிலான தேர்தல் பறக்கும் படையினர் வாகன தணிக்கையில் ஈடுபட்டனர். அப்போது சிவகாசியில் இருந்து ஸ்ரீவில்லிபுத்தூர் நோக்கி வந்த சரக்கு வாகனத்தை நிறுத்தி சோதனை செய்தனர்.

அதில் ரூ.1,875 விற்பனை விலை குறிப்பிடப்பட்ட 3 லிட்டர் கொள்ளளவு கொண்ட 500 குக்கர் பெட்டிகள் இருந்தது கண்டறியப்பட்டது. இது குறித்து சரக்கு வாகனத்தை ஓட்டி வந்த ராஜபாளையம் அருகே முகவூர் முத்துச்சாமிபுரம் பகுதியை சேர்ந்த கருப்பசாமி(25) என்பவரிடம் விசாரித்த போது, உரிய ஆவணங்கள் இல்லாதது தெரியவந்தது.

இதையடுத்து ரூ.9,37,500 மதிப்புள்ள 500 குக்கர் பெட்டிகளை பறிமுதல் செய்த அதிகாரிகள், அவற்றை ஸ்ரீவில்லிபுத்தூர் சார்நிலை கருவூலத்தில் ஒப்படைத்தனர்.

# மேட்டூர் அணைக்கு 531 கனஅடியாக நீர்வரத்து அதிகரிப்பு



**மேட்டூர், மார்ச்.30:** மேட்டூர் அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 531 கனஅடியாக அதிகரித்துள்ளது.

காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்யும் மழையைப் பொறுத்து மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தும், குறைந்தும் காணப்படுகிறது. அணைக்கு நேற்று முன்தினம் விநாடிக்கு 333 கன அடியாக இருந்த நீர்வரத்து நேற்று 531 கனஅடியாக அதிகரித்தது. காவிரி கரையோர மக்களின் குடிநீர் தேவைக்காக அணையிலிருந்து விநாடிக்கு 1,200 கனஅடி நீர் திறக்கப்பட்டு வருகிறது.

நீர் திறப்பை விட நீர் வரத்து குறைவாக உள்ளதால் அணையின் நீர் மட்டம் சரிந்து வருகிறது.நீர்மட்டம் 82.64 அடியிலிருந்து 82.56 அடியாகவும், நீர் இருப்பு 44.63 டிஎம்சியில் இருந்து 44.55 டிஎம்சியாகவும் குறைந்துள்ளது.

# உரிய ஆவணங்கள் இல்லையெனக் கூறி ஆண்டிபட்டியில் மொய் பணம் ரூ.13 லட்சம் பறிமுதல்

**ஆண்டிபட்டி, மார்ச்.30:** உரிய ஆவணம் இல்லாததால், மொய்ப் பணம் ரூ.13 லட்சத்தை பறக்கும் படை அதிகாரிகள் பறிமுதல் செய்து ஆண்டிபட்டி கருவூலத்தில் ஒப்படைத்தனர்.

தேர்தல் ஆணையத்தின் உத்தரவுப்படி, ஆவணமின்றி கொண்டு செல்லப்படும் பணம் மற்றும் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றன. அதன்படி, தேர்தல் பறக்கும் படையினர் கண்டமனூர் அருகே ராஜேந்திரா நகர் பகுதியில் வாகனச் சோதனையில் நேற்று ஈடுபட்டிருந்தனர். அப்போது, அந்த வழியே வந்த காரை நிறுத்தி சோதனையிட்டனர். அதில் ரூ.12 லட்சம் இருந்தது தெரியவந்தது.

இதுகுறித்து பணம் கொண்டுவந்த அம்மச்சியாபுரத்தைச் சேர்ந்த இளையராஜாவிடம் அதிகாரிகள் விசாரணை நடத்தினர். அதில், கடமலைக் குண்டு அருகே அய்யனார் கோயிலில் வசந்த விழா நடத்தி, அதில் கிடைத்த மொய்ப் பணத்தை வீட்டுக்கு கொண்டு செல்வதாகத் தெரிவித்தார். ஆனால், அவரிடம் அதற்கான ஆவணம் இல்லாததால் பணத்தை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

இதேபோல், ஆண்டிபட்டி புறநகர் பகுதியில் பறக்கும் படையினர் சோதனை செய்து கொண்டிருந்தனர். அப்போது கேரள மாநிலம் குமுளியில் இருந்து உசிலம்பட்டி நோக்கிச் சென்ற காரை நிறுத்தி சோதனையிட்டனர். அதில் குமுளியைச் சேர்ந்த திவான் மைதீன் ரூ.1 லட்சம் வைத்திருந்தது தெரியவந்தது.

விசாரணையில், ராஜபாளையத்தில் நடைபெற உள்ள நிச்சயதார்த்த விழாவில் மொய் செய்வதற்காக பணத்தை கொண்டுசெல்வதாகத் தெரிவித்தார். ஆனால், உரிய ஆவணம் இல்லாததால் அதிகாரிகள் அப்பணத்தை பறிமுதல் செய்தனர்.

இரண்டு இடங்களிலும் பறிமுதல் செய்யப்பட்ட பணத்தை பறக்கும் படையினர் ஆவணப்படுத்தி, சீலிட்டு ஆண்டிபட்டி கருவூலத்தில் ஒப்படைத்தனர்.

# முன்னாள் அமைச்சர் தங்கமணி வீடு முற்றுகை - நாமக்கல் அதிமுகவில் பரபரப்பு

**நாமக்கல், மார்ச்.30:** நாமக்கல் அதிமுக வேட்பாளரை மாற்ற வலியுறுத்தி பள்ளிபாளையத்தில் உள்ள முன்னாள் அமைச்சர் தங்கமணியின்வீட்டை நாமக்கல் முன்னாள் எம்எல்ஏ பாஸ்கர் ஆதரவாளர்கள் முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதிமுக வேட்பாளர் பட்டியல் நேற்று வெளியானது. இதில் நாமக்கல் தொகுதி வேட்பாளராக பி.எஸ். மோகன் அறிவிக்கப்பட்டார். இதற்கு நாமக்கல் முன்னாள் எம்எல்ஏ கே.பி.பி.பாஸ்கர் ஆதரவாளர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். மேலும், அவரை மாற்ற வலியுறுத்தி கட்சிப் பொறுப்பில் இருந்து விலகுவதாகவும் அறிவித்தனர்.

இந்தச் சூழலில், இன்று காலை முன்னாள் எம்எல்ஏ பாஸ்கர் தனது ஆதரவாளர்களுடன் பள்ளிபாளையம் அருகே ஆலாம்பாளையத்தில் உள்ள கட்சியின் மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பி.தங்கமணி வீட்டை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டார். அப்போதுசெய்தியாளர்களிடம் அவர் கூறியது:

"கட்சியின் பொதுச் செயலாளரை மிரட்டியதால் நாமக்கல் வேட்பாளர் மோகன் அறிவிக்கப்பட்டுள்ளார். நான்கு மாவட்ட செயலாளர்களை நான் பார்த்துள்ளேன்.

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 6 தொகுதியிலும் அதிமுகவில் பிரச்சினை உள்ளது. ஆனால், அவர்கள் பயந்து கொண்டு மாவட்ட செயலாளர் தங்கமணிக்கு எதிராக பேச மறுக்கின்றனர். நான் அப்படிபட்ட நபர் கிடையாது. நாமக்கல் மாவட்ட அதிமுக அலுவலகத்தில் நடைபெறும் கூட்டத்துக்கு எனக்கு அழைப்பு விடுப்பது கிடையாது. எனக்கு மட்டும் இல்லை, ஒன்றிய செயலாளர் உள்ளிட்ட நிர்வாகிகளையும் அழைக்கவில்லை.

தொடர்ந்து நாமக்கல்லில் உள்ள அதிமுக அலுவலகத்தில் முன்னாள் எம்எல்ஏ பாஸ்கர் தலைமையில் வேட்பாளர் மாற்றம் செய்ய வலியுறுத்தி ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதில் பாஸ்கர் ஆதரவு ஒன்றிய செலாளர்கள் கோபிநாத், ராஜா, சேகர், ரவிச்சந்திரன், பொதுக்குழு உறுப்பினர் மயில்சுந்தரம் உள்பட ஏராளமான நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இதனிடையே, இந்த விவகாரம் தொடர்பாக பள்ளிபாளையத்தில் முன்னாள் அமைச்சர் தங்கமணியை செய்தியாளர்கள் தொடர்பு கொண்டபோது நாளை விளக்கம் அளிப்பதாக தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் தங்கமணியின் வீட்டை அதிமுகவினர் முற்றுகையிட்ட சம்பவம் நாமக்கல் மாவட்ட அதிமுகவினர் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# நெல்லை, தூத்துக்குடி மாவட்ட பள்ளி, கல்லூரி என்சிசி மாணவிகள் 300 பேருக்கு துப்பாக்கிச் சுடுதல் பயிற்சி



**தியாகராஜ நகர், மார்ச்.30:** நெல்லை,தூத்துக்குடி மாவட்ட பள்ளி கல்லூரிகளின் என்சிசி மாணவிகள் 300 பேருக்கு துப்பாக்கிச் சுடும் பயிற்சி பாளையங்கோட்டை ஜான்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று நடந்தது.

என்சிசி சார்பில் ஆண்டுதோறும் குடியரசு தின விழாவில் பங்கேற்பதற்கான துப்பாக்கி சூடுதல் தகுதி பயிற்சி நிகழ்ச்சி மண்டல மாநில அளவில் நடத்தப்பட்டு தகுதியுள்ள என்சிசி மாணவிகள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

2027ம் ஆண்டு குடியரசு தின விழா போட்டியில் பங்கேற்பதற்காக இப்போதே முதற்கட்ட துப்பாக்கிச் சுடுதல் பயிற்சி அகில இந்திய அளவில் முகாம் தொடங்கப்பட்டு நடந்து வருகிறது.தமிழ்நாடு அரசியல்

அந்த வரிசையில் என்சிசி மகளிர் 3ம் படை பிரிவு மாணவிகளுக்கு துப்பாக்கிச் சூடு பயிற்சி பாளையங்கோட்டை ஜான்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினமும், நேற்றும் என தொடர்ந்து இரு நாட்கள் நடத்தப்பட்டது.

இதில் நெல்லை,தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள பள்ளி, கல்லூரிகளின் என்சிசி மாணவிகள் 300 பேர் பங்கேற்று பயிற்சி பெற்றனர். இவர்களுக்கு ராணுவ அதிகாரி கமாண்டிங் கர்னல் டி எஸ் சமந்த் (சேனா மெடல்) தலைமையில் பாயிண்ட் 22 துப்பாக்கி மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது.

# மழையின்றி வறட்சி ஆழியார் அணையின் நீர்மட்டம் சரிவால் விவசாயிகள் வேதனை

**பொள்ளாச்சி, மார்ச்.30:** பொள்ளாச்சியை அடுத்த ஆழியார் அணையின் நீர்மட்டம் மழையின்றி வறட்சியால் மிகவும் சரிந்துள்ளது. இதனால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

கோவை மாவட்டம் பொள்ளாச்சியை அடுத்த ஆழியார் அணைக்கு பரம்பிக்குளத்தில் தண்ணீர் திறக்கும் போது கான்டூர் கால்வாய் வழியாகவும் மழை இருக்கும்போது சின்னாறு, நவமலை, கவியருவி ஆகியவற்றில் இருந்தும் தண்ணீர் வரத்து இருக்கும்.

இந்த அணையிலிருந்து ஆயக்கட்டு பாசன விவசாய பகுதிக்கு ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட நாட்கள் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அதுபோல் கேரளாவுக்கும் ஒவ்வொரு ஆண்டும் ஏழேகால் டிஎம்சி தண்ணீர், அவ்வப்போது திறக்கப்படுகிறது.

இதில், கடந்த ஆண்டில் ஜூன் துவக்கம் முதல் சில மாதமாக தொடர்ந்து பெய்த தென்மேற்கு பருவமழையின்போது, ஆழியார் அணையின் நீர்மட்டம் விரைந்து முழு அடியான 120 அடியையும் எட்டியது. மேலும், அதே ஆண்டில் அக்டோபர் மற்றும் நவம்பர் மாதத்தில் அவ்வப்போது பெய்த வடகிழக்கு பருவமழையினால், அணையின் நீர்மட்டம் பல மாதங்களாக சுமார் 1150 அடிக்கு மேல் இருந்துள்ளது.

அதன்பின் இந்த ஆண்டு துவக்கம் வரையிலும் 110 அடிக்கு மேல் தண்ணீர் இருந்தது. அதன்பின் மழையில்லாமல் வெயிலின் தாக்கம் மெல்லமெல்ல அதிகரிக்க துவங்கி அணைக்கு தண்ணீர் வரத்து குறைய துவங்கியது. மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் இரண்டு மாதத்திற்கு மேலாக வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வறட்சியானது. இதனால், அணைக்கு தண்ணீர் வரத்து மிகவும் குறைந்தது.

நேற்றைய நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 65 அடியாக குறைந்துள்ளது. ஆழியார் அணையின் நீர்மட்டம் மிகவும் குறைவால் அணையின் பெரும்பாலான பகுதி பாறைகள் மற்றும் மணல் மேடான இடமாக தெரிகிறது. மேலும், ஆங்காங்கே சேறும் சகதியுமாகவும் சமபாதையாகவும் காணப்படுகிறது.

சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு ஆழியார் அணை வறண்டது போல், இப்போது மீண்டும் அணைப்பகுதி வறண்டு வருவது விவசாயிகளிடையே வேதனையை ஏற்படுத்தியுள்ளது. இச்சூல்நிலை தொடர்ந்து நீடித்தால் வரும் நாட்களில் ஆழியார் அணையிலிருந்து பாசனத்துக்கும், குடிநீர் தேவைக்கும் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் அவலம் உண்டாகும் என விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர்.

# மேற்கு தொடர்ச்சி மலையில் வனப்பகுதியில் இரண்டு இடங்களில் காட்டுத்தீ பரவியது



**தேனி, மார்ச்.30:** பெரியகுளம் அருகே மேற்கு தொடர்ச்சி மலையில் வனப்பகுதியில் இரண்டு இடங்களில் காட்டுத்தீ பரவியது. பற்றி எரியும் காட்டுத் தீ காரணமாக 200க்கும் அதிகமான ஏக்கர் வனப்பகுதிகள் எரிந்து நாசமடைந்துள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தென்னிந்திய மாணவர்களின் கண்டுபிடிப்புக்கு சென்னை ஐஐடியில் 'இன்னோவா' இறுதிபோட்டி




**சென்னை, மார்ச்.30:** தென்னிந்திய மாணவர்களின் கண்டுபிடிப்புகளுக்கான 'இன்னோவா' இறுதிப்போட்டி ஐஐடி மெட்ராஸில் இன்று நடைபெற்றது. ஐஐடி முன்னாள் மாணவர்களின் முன்முயற்சியான பிஎஸ்எல்எஸ் அமைப்பின் இன்னோவேஷன் போட்டியான 'இன்னோவா' சீரிஸின் 2025-26 இறுதிப் போட்டி சென்னை ஐஐடி வளாகத்தில் நடைபெற்றது.

தமிழ்நாடு, தெலுங்கானா, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா மற்றும் கேரளா ஆகிய ஐந்து தென்னிந்திய மாநிலங்களில் உள்ள 47 பொறியியல் கல்லூரிகளைச் சேர்ந்த 64 குழுக்களின் புதுமையான கண்டுப்பிடிப்புகள் இந்நிகழ்வில் காட்சிப்படுத்தப்பட்டன. இது ஓராண்டு கால கண்டுபிடிப்பு மற்றும் வழிகாட்டுதல் பயணத்தின் உச்சகட்ட நிகழ்வாக அமைந்தது. டிஜிட்டல் தொழில்நுட்பத்தையும் பொறியியல் அறிவையும் சங்கமிக்கும் இணைப்பாக இருந்தது.

நிஜ உலக சவால்களுக்குத் தீர்வு காண்பதற்காக செயற்கை நுண்ணறிவ, இன்டர்நெட் ஆஃப் திங்ஸ், தரவு பகுப்பாய்வு மற்றும் ஆட்டோமேஷன் போன்ற துறைகளை ஒருங்கிணைத்து மாணவர்கள் கண்டுபிடிப்புகளை உருவாக்கினர். இந்த இறுதிப் போட்டியில், இறுதிச் சுற்றுக்குத் தேர்வானவர்கள் தங்களின் செயல்பாட்டு முன்மாதிரிகளை காட்சிப்படுத்தினர்; இது அவர்களின் படைப்பாற்றல், தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் தொழில்முனைவோர் சிந்தனை ஆகியவற்றை வெளிப்படுத்தும் வகையில் அமைந்தது.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட அக்னிகுல் காஸ்மோஸ் நிறுவனத்தின் இணை நிறுவனர் மற்றும் சிஇஓவும் ஸ்ரீநாத் ரவிச்சந்திரன், வெற்றியாளர்களின் சிறந்த சாதனைகளைப் பாராட்டி பரிசுகளையும் சான்றிதழ்களையும் வழங்கினார். சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட அக்னிகுல் காஸ்மோஸ் நிறுவனத்தின் இணை நிறுவனர் மற்றும் சிஇஓ ஸ்ரீநாத் ரவிச்சந்திரன் பேசுகையில், 'நடப்பு ஆண்டின் போட்டியில் 62 கல்வி நிறுவனங்களில் இருந்து 272 குழுக்கள் பங்கேற்றன.

அவற்றில் 216 குழுக்கள் 6 மண்டல அளவிலான அரையிறுதிப் போட்டிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டன. மேலும் 64 குழுக்கள் மாபெரும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றன. இந்தப் போட்டியில் சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கைக்குரியதிட்டங்களுக்கு மேலதிக ஆதரவும் வளர்ச்சி வாய்ப்புகளும் வழங்கப்படும் என்றும், இதன் மூலம் மாணவர்கள் தங்களது யோசனைகளை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல உதவும் என்றும் அறிவிக்கப்பட்டது' என்றார்.

# நாஞ்சிக்கோட்டை பகுதியில் இயற்கை உரத்துக்காக வயல்களில் மேய்ச்சலுக்கு விடப்பட்ட வாத்துகள்



**தஞ்சாவூர், மார்ச்.30:** நாஞ்சிக்கோட்டை பகுதியில் இயற்கை உரத்துக்காக வயல்களில் வாத்துக்கள் மேய்ச்சலுக்கு விடப்படுகின்றன. காவிரி டெல்டா மாவட்டங்களான தஞ்சை, நாகை, திருவாரூர், மயிலாடுதுறையில் குறுவை, சம்பா, தாளடி என மூன்றுபோகம் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. மேலும் கோடை நெல் சாகுபடியும் நடைபெறுகிறது.

காவிரி டெல்டா சாகுபடிக்காக மேட்டூர் அணை ஆண்டு தோறும் ஜூன் மாதம் 12ம் தேதி திறக்கப்படுவது வழக்கம். தற்போது தஞ்சை மாவட்டத்தில் சம்பா மற்றும் தாளடி நெல் அறுவடை பணி முடியும் தருவாயில் உள்ளது. இதை தொடர்ந்து கோடை சாகுபடிக்காக விவசாயிகள் நிலங்களை தயார்படுத்தி வருகின்றனர். விவசாயிகள் ரசாயன உரங்களை தவிர்த்து இயற்கை உரங்களை பயன்படுத்தி சாகுபடி செய்து வருகின்றனர்.

இதற்காக வயல்களில் ஆட்டு கிடை அமைத்தும், வயல்களை வாத்துகளை மேயச்சலுக்கு விட்டும் அதன் கழிவுகள் மூலம் இயற்கை உரங்களை பெறுகின்றனர். தற்போது நாஞ்சிக்கோட்டை பகுதியில் இயற்கை உரத்திற்காக வயல்களில் வாத்துகளை மேய்ச்சலுக்கு விட விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்த வாத்துகளின் கழிவுகள் இயற்கை உரமாக பயன்படுகிறது. பயிர்களை தாக்கும் பூச்சிகளை வாத்துகள் அழிக்கின்றன.

இதனால் பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்கும் செலவும் குறைகிறது என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.வாத்துகள் 5 மாதங்களில் வளர்ந்து விற்பனைக்கு தயாராகின்றன. ஒரு வாத்தின் விலை ரூ.300 முதல் ரூ.450 வரை விற்பனை செய்யப்படுகின்றன. கோழி வளர்ப்பை விட வாத்துகள் வளர்ப்பு பொருளாதார முன்னேற்றத்துக்கு முதுகெலும்பாக விளங்கி வருகிறது என்று வாத்துக்கள் வளர்ப்போர்தெரிவிக்கின்றனர்.

# சேத்துமடை கால்வாய் திடீர் உடைப்பு தண்ணீர் நிறுத்தப்பட்டு சீரமைக்கும் பணி துவக்கம்



**பொள்ளாச்சி, மார்ச்.30:** பொள்ளாச்சியை அடுத்த சர்க்கார்பதியிலிருந்து, சேத்துமடை கால்வாய் வழியாக பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது. சுமார் 8 கி.மீ தூரமுள்ள இந்த கால்வாயின் பெரும் பகுதி அடர்ந்த வனப்பகுதி வழியாகவே செல்கிறது.

ஆனால் இந்த கால்வாயை சீரமைக்காமல் பல ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.இதனால் அதில் முறிந்த மரக்கிளைகள் அடைத்து தண்ணீர் தேங்கி செல்வதால் மண் அரிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் சர்க்கார்பதியிலிருந்து சுமார் 1 கி.மீ தூரத்தில் சேத்துமடை கால்வாய் திடீர் என நேற்று முன்தினம் மாலையில் உடைப்பு ஏற்பட்டது. இதனால் அதிலிருந்து தண்ணீர் விரயமாக துவங்கியது. இதையறிந்த பொதுப்பணி துறையினர், சேத்துமடை கால்வாய்க்கு செல்லும் தண்ணீர் திறப்பை நிறுத்தினர். இதைத்தொடர்ந்து, உடைப்பு ஏற்பட்ட இடத்தில் ஆய்வு மேற்கொண்டபோது சுமார் 10 மீட்டர் அகலத்தில் கால்வாய் உடைப்பு ஏற்பட்டதை அறிந்தனர். இதையடுத்து அந்த கால்வாயை சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

இந்த கால்வாய் உடைப்பை இன்னும் 10 நாட்களில் சீரமைத்து மீண்டும் சேத்துமடை கால்வாய் வழியாக தண்ணீர் திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.




# "இந்தத் தேர்தலோடு கருணாநிதி குடும்பத்துக்கு முற்றுப்புள்ளி" - பிரச்சாரத்தில் பொங்கிய பழனிசாமி



**சென்னை, மார்ச்.30:** இந்தத் தேர்தலோடு முன்னாள் முதல்வர் மு.கருணாநிதியின் குடும்பத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி ஆவேசமாகப் பேசினார்.

சென்னை ஆர்.கே.நகர் தொகுதியில் அதிமுக வேட்பாளராக அறிவிக்கப்பட உள்ள மாவட்ட செயலாளர் ஆர்.எஸ்.ராஜேஷை ஆதரித்து கட்சியின் பொதுச்செயலாளர் பழனிசாமி நேற்று பிரச்சாரம் செய்தார். கூட்டத்தில் அவர் பேசியதாவது: கடந்த 5 ஆண்டுகள் திமுக அரசு கொடுமையான ஆட்சியை கொடுத்தார்களே தவிர, மக்களுக்கு என்ன நன்மை கிடைத்தது? குடும்ப ஆட்சி, வாரிசு அரசியலைத்தான் மக்கள் பார்த்தார்கள்.

கருணாநிதி முதல்வராக இருந்தபோது, ஸ்டாலினை எம்எல்ஏ. வாக்கி, அமைச்சராக்கி, துணை முதல்வராக்கி, திமுகவுக்கு செயல் தலைவராக்கினார். அவருக்குப் பின் ஸ்டாலின் திமுக தலைவராகி விட்டார். கருணாநிதி போலவே, கட்சியிலும், ஆட்சியிலும் தனக்குப் பின்னால், அதுவும் ஆண் வாரிசுகள் திமுக கட்சிக்கு தலைமை தாங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு உதயநிதியை அறிமுகம் செய்து,துணை முதல்வராக்கி இருக்கிறார் முதல்வர் ஸ்டாலின்.

இவர் திமுகவின் தலைவர், உதயநிதி இளைஞரணி மாநிலச் செயலாளர், கனிமொழி துணைப்பொதுச்செயலாளர். இப்படி குடும்பத்தில் இருப்பவர்கள் தான் அதிகாரத்திலும் ஆட்சியிலும், கட்சியிலும் உயர்ந்த பதவியில் இருக்க முடியும். திமுகவில் எவ்வளவு தான் பாடுபட்டு உழைத்தாலும், தொண்டர்களுக்கு அங்கீகாரம் கிடையாது. ஆனால் அதிமுக அப்படி இல்லை. நான் முதன் முதலாக தேர்தல் பிரச்சார பயணத்தை மயிலாப்பூரில் தொடங்கினேன்.

அந்த கூட்டத்தில் நான் பேசியதற்கு அடுத்த நாள் 3 அமைச்சர்கள் பதில் கொடுக்கிறார்கள். அந்த அளவுக்கு ஸ்டாலினுக்கு தேர்தல் பயம், தோல்வி பயம் வந்து விட்டது. மக்கள் செல்வாக்கை ஸ்டாலின் இழந்துவிட்டார். அவர்களுக்கு தேர்தல் ஜுரம் வந்துவிட்டது. அதனால் தான் என்ன பேசுறோம் என தெரியாமல் பேசுகிறார்கள் திமுகவினர். இந்த தேர்தலோடு கருணாநிதி குடும்பத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

இனி தமிழகத்தை ஆளக்கூடியவர்கள் சாதாரண குடிமகன் தான். 10 ஆண்டுகள் அங்கம் வகித்த கட்சிகளுக்கு அற்புதமான பரிசு கொடுத்துவிட்டார் ஸ்டாலின். இருக்கும் வரை அட்டை போன்று அவர்களின் சத்துகளை உறிஞ்சிவிடுவார்கள். இனியாவது அவர்கள் சிந்தித்து சுதந்திரமாக செயல்பட வேண்டும்.

அதிமுக ஆட்சிக்கு வந்தால், எல்லா குடும்ப தலைவிக்கும் மாதம் 2 ஆயிரம் வழங்கப்படும். மக்களின் துன்பத்தைக் களைய உதவித்தொகை ரூ.10 ஆயிரம் வழங்கப்படும். ஆண்களும் நகரப் பேருந்தில் கட்டணம் இல்லாமல் பயணிக்கலாம். குடும்ப அட்டைதாரர்களுக்கு ஃப்ரிட்ஜ் வழங்கப்படும்.

அதிமுக சார்பில் கொடுத்த தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும். இவ்வாறு அவர் பேசினார். இதனைத் தொடர்ந்து பழனிசாமி, திருவொற்றியூர் தொகுதியில், அதிமுக வேட்பாளர் கே.குப்பனை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொண்டார்.

# வேட்புமனு தாக்கல் செய்யும் போது, கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் வெளியிட்டது சென்னை மாநகராட்சி



**சென்னை, மார்ச்.30:** இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் எதிர்வரும் 23.04.2026 அன்று ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற உள்ளது. சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் 30.03.2026 (திங்கட்கிழமை) முதல் 06.04.2026 (திங்கட்கிழமை) வரை காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை வேட்புமனுத் தாக்கல் செய்யலாம்.

1881ஆம் ஆண்டு செலாவணி முறிச்சட்டத்தின்கீழ், பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ள 31.03.2026 (செவ்வாய்க்கிழமை), 01.04.2026 (புதன்கிழமை), 03.04.2026 (வெள்ளிக்கிழமை) மற்றும் 05.04.2026 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நாட்களில் வேட்புமனுத் தாக்கல் செய்ய இயலாது. வேட்பு மனுக்கள் தாக்கல் செய்ய கடைசி நாள் 06.04.2026 (திங்கட்கிழமை) ஆகும்.இந்தியா சுற்றுலா

மேலும், வேட்புமனுக்களானது மேற்கண்ட நாட்களில் காலை 11.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை மட்டுமே பெறப்படும். வேட்புமனுத்தாக்கல் செய்யும் நிகழ்வின் போது, தேர்தல் நடத்தும் அலுவலரின் அலுவலகத்திலிருந்து 100 மீட்டர் சுற்றளவுக்குள் 3 வாகனங்கள் மட்டுமே அனுமதிக்கப்படும். வேட்புமனுத்தாக்கலின் போது, தேர்தல் நடத்தும் அலுவலரின் அலுவலகத்திற்குள் வேட்பாளர் உட்பட 5 நபர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

வேட்பாளர்கள் வேட்பு மனுவினை இணையவழியில் (SUVIDHA PORTAL) பூர்த்தி செய்திடலாம். ஆனால், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வேட்புமனுத்தாக்கலின் போது நேரில் தாக்கல் செய்ய வேண்டும். அனைத்து வேட்பு மனுக்களும் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் மேற்குறிப்பிட்ட வேட்பு மனுத்தாக்கல் செய்யும் நாட்களில் நேரில் மட்டுமே தாக்கல் செய்யப்பட வேண்டும்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002. and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com